ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

| | | |
|---|---|---|
| சிலம்பு அ | மெய்கண்டான்யாண்டு-எ௱எ ஆவணித் திங்கள் 1930௵ ஜூலை௴—ஆகஸ்டு௴ | பரல் எ |


சிவமயம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

இந்தத் தேவாரப்பாட்டு சிவபெருமானுக்கு உயிர் (ஆன்மா) எவ்வாறு அகவழிபாடு செய்தல் வேண்டும் என்பதையும் அதன் பயனையும் கூறுகின்றது. உயிர் தன் பொருட்டு வழிபாடு (ஆன்மார்த்த பூசை) அகத்திலும் புறத்திலும் சிவபெருமானுக்குச் செய்கின்றான். பிறர் பொருட்டு வழிபாடு (பரார்த்த பூசை) கோயிலில் செய்யப்படுகின்றது. பிறர் பொருட்டுப் புறவழிபாடு கோயிலில் இலிங்கமாகிய உருவில் புறப் பொருளைக் கொண்டு செய்யப்படுகின்றது. தன்பொருட்டு அகவழி பாடு மனமாகிய இலிங்கத்தைக் குறியாக வைத்து அறிவு அன்புப்பண்புகளைக்கொண்டு செய்யப்படுகின்றது. இந்தப்பாட்டில் பிறர் பொருட்டுக் கோயில் வழிபாட்டுக்கும் தன் பொருட்டு அகவழி பாட்டுக்கும் ஒப்புமை கூறப்பட்டிருக்கிறது. அகவழிபாடு வழுவாமல் உறுதிப்படுதற் பொருட்டே புறவழிபாடுசெய்யப்படுகின்றது.

ஈசனார்க்கு - சிவபெருமானுக்கு

**காயமே கோயிலாக**=காயம் என்பது உடல். புறவழிபாடு செய்யும் பொது மக்களுக்குக் கோயில் இடமாக அமைந்துள்ளது போல, தன் பொருட்டு அகவழிபாடு செய்யும் உயிருக்கு உடல் இடமாக அமைந்துள்ளது.

**கடிமனம் அடிமையாக**=கடிதல் என்பது போக்குதல், நீக்குதல். கடி மனம்-காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களும் நீக்கப் பட்ட மனம். அடிமையாக-உலகப்பற்றுவைத்து சங்கற்பவிகற்பங் கள் செய்யாமல் உயிரில் அடங்கி உயிர் சிவத்தன்மை பொருந்தி யிருக்க.

மனமானது காமம் வெகுளி மயக்கங்களினின்றும் நீங்கித் தூய்மையாய்ச் சங்கற்ப விகற்பங்களாகிய செயல்களின்றி உயிரில் அடங்கி உயிர் சிவத்தன்மை பொருந்தியிருக்க.

**வாய்மை தூய்மையாக**=வாய்மை என்பது உண்மைத்தன்மை (சத்துத் தன்மை).

புறவழிபாடு செய்கிறவனுக்கு, நீர்முழுக்கு, வெண்ணீறு தரித்தல், கைவைப்பு (கரநியாசம்), உறுப்புவைப்பு (அங்கநியாசம்), உயிர்ப்படக்கம் (பிராணாயாமம்), ஆகிய இச்செயல்கள் உடலைத் தூய்மை செய்து சிவத்தன்மை அடையச் செய்தல் போல, காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்களின்றி அடங்கியிருத்தல் மன தைத் தூய்மைசெய்து சிவத்தன்மை பொருந்தச் செய்கிறது.

**மனமணி இலிங்கமாக**=மனமணி என்பது மனமாகிய மணி. மணியில் ஒளி விளங்குதல் போல, தூய்மை அடைந்த மனதினிடத்து அருள் ஒளி விளங்குதலால் மனமணி என்றார். புறவழி பாட்டுக்குக் கோயிலில் இலிங்கம் குறியாக அமைதல் போல, தன்பொருட்டு அகவழி பாட்டுக்குத் தூய்மை அடைந்து அருள் ஒளி விளங்குகிற மனம் குறியாக அமைகிறது.

கடிமனம் மனமணி என இருவேறு மனமில்லை. குற்றங்களினின்று நீங்கித் தூய்மை அடைந்த மனமே மனமணியாகிறது.

**நேயமே நெய்யும்பாலா**=நேயம் என்பது அன்பு பாலாக எனற்பாலது பாலா எனக் கடைக் குறைந்து நின்றது. நெய்யும் பாலும் என்பன ஏனைய ஆவின் சிறுநீர் சாணம் தயிர் ஆகிய மூன்று பொருள்களை

யும் இனப்பொருள்களாக உடன் தழுவி ஆனைந்தும் எனப்பொருள் படும். புறவழிபாட்டில் இலிங்கத்துக்கு ஆனைந்தும் ஆட்டுதல் தூய்மை செய்தல் போல்,அகவழிப்பாட்டில் மனதுக்கு உயிர் தனக்கு அருளால் சிவம் செய்து வரும் பேருதவிச் செயல்களை நினைந்து, குழைந்து உருகி, தன்னறிவு முனைப்பின்றிச் சிவத்தில் அடங்கி நிற்கும் அன்பானது தூய்மை செய்கின்றது. முழுக்கானது (அபிடேகம்) உயிர்த்தூய்மை (ஆன்மசுத்தி) யைக்குறிககிறது.

நிறையநீர் அமையவாட்டி=நிறையநீர்-என்பது நிறை+அ+நீர் எனப் பிரித்து அகரத்தைச் சாரியையாகத்தள்ளி நிறைநீர் என்னும் சொற்றொடருக்கு நிறைந்த தன்மை என்று பொருள் கொள்க.

அமைய-பொருந்த. ஆட்டி-முழுககுச் செய்வித்து. நிறைந்த தன்மை பொருந்த, அதாவது, குறைவற முழுக்கு (அபிடேகம்) செய்வித்து என்பது பொருளாகும்.

போற்று பூசனை=அவியுடன் சேர்ந்திருக்கிற போற்று என்னும் சொல்லை பூசனை என்னும் சொல்லுக்கு அடைமொழியாகக் கொள்க. போற்று பூசனை-இவ்வாறு பேணி அல்லது விரும்பிச்செய்கின்ற வழிபாட்டினால்,

அவிக்காட்டினேமே=அவி என்பது தேவர்களுக்குப் பிரியமாகக் கொடுக்கப்படும் உணவு. அஃது இங்கே உருவகப் பொருளில் ஆன்ம நிவேதனத்தை (offering of oneself to god)க் குறிக்கிறது.

புறவழி பாட்டில் அன்ன முதலிய பொருள்கள் இலிங்கத்துக்கு நிவேதனம் காட்டப்படுதல் போல, தன் பொருட்டு அகவழிபாட்டில், உயிர், தன்னுடைய தன்னறிவை (சிவபோதத்தை) சிவத்தினிடத்தில் அடங்கும்படி கொடுத்தலானது அவி ஆகின்றது. உயிர் தன்னறிவை இழந்து, சிவத்துடன் ஒன்றி அடங்கி நிற்றல் சிவத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தலால் அது அவி எனப்பட்டது.

அவிக்காட்டினேமே-அவி காட்டினேமே என்றிருக்கவேண்டும். உயிர்ப்பலி கொடுத்தலைச் செய்தோம் (நாங்கள்)

ஈசனார்க்குக்காயமே கோயிலாகக்கடி மனமடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி யிலங்கமாக நேயமே நெய்யும் பாலுமாக நிறைநீர் அமைய வாட்டி (இவ்வாறு) போற்று பூசனையால் அவி காட்டினேமே என்று முடித்துக்கொள்க.

பேரின்பம் அடைந்தோம் என்பது குறிப்பெச்சம்.

நாங்கள் (அடியார்கள்) தோன்றா எழுவாய். காட்டினேமே பயனிலை.

இதனால் உயிர் சிவபெருமானுக்குச் செய்யும் வழிபாடு என்பது, உயிர் தனக்குச் சிவபெருமான் செய்யும் அருளை நோக்கி மனங் குழைந்து உருகி அன்பு செய்தல் என்பதும், அவ்வாறு அன்பு மீதூர்ந்து செய்தலால் அவன் திருவடி அடைந்து பேரின்பம் நுகர்தலே அவ்வழிபாட்டின் பயன் என்பதும் பெறப்பட்டன.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---

# யாப்பிலக்கணம்.

[தி. த. கனகசுந்தரம் பிள்ளை B. A.,]

TAMIL PROSODY

தமிழாசிரியர்கள் இலக்கணத்தை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என ஐந்தாகப் பகுப்பார்கள். அவற்றுள் யாப்பிலக்கணமென்பது செய்யுளின் இலக்கணம். யாப்பு யாத்தல், அதாவது கட்டுதல் என்று பொருள்படும்; யா பகுதி, பு தொழிற்பெயர் விகுதி; காப்பு, மூப்பு என்றாற்போல. செய்யுள் என்பதற்குச் செய்தல் என்பது பொருள்; செய் பகுதி, உள் தொழிற்பெயர் விகுதி; பாய்த்துள் விக்குள் என்றாற்போல. யாப்பிலக்கணம், செய்யுளிலக்கணம், யாப்பியல், செய்யுளியல், பாட்டியல் என்பன ஒரு பொருட்சொற்கள். இயல் என்பது இலக்கணம்.

தமிழாசிரியர் சிலர் யாப்பியலைச் செய்யுளியல் பாட்டியல் என இரண்டாகப் பகுத்து வழங்குவர். அவர் செய்யுளியலில் பாவகையும் அவற்றின் உறுப்புக்களும் கூறி, பாட்டியலில் தொடர்நிலைச் செய்யுளின் விகற்பமும் அவற்றின் இலக்கணமும் கூறுவர்.

ஆதியில் தமிழில் யாப்பிலக்கணம் செய்தவர் யாவரென்பது இப்போது புலப்படவில்லை. அருந்தவக்கொள்கை அகத்-

தியனாரே தமிழிற்கு எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்னும் இயற்றமிழிலக்கணம் ஐந்தும், இசைத்தமிழிலக்கணமும் நாடகத்தமிழிலக்கணமும் இயற்றினார் என்றுசிலர் சொல்லுவர். இவ்விலக்கணங்களை எல்லாம் புதிதாய் ஒருவரே இயற்றினார் என்று சொல்லுவது பொருந்தாது. எத்துணை வல்லராயினும் ஒருவராலே ஒரே காலத்தில் இவைகளெல்லாம் நூதனமாக இயற்றப்படத்தக்கனவல்ல. வடமொழியில் முன்னுள்ள வியாகரண நூல்களையெல்லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றி னுஞ் சிறக்கத் தாமொரு வியாகரணமியற்றிய ஆசிரியர் பாணி னியார் போலத் தமிழில் முன்னுள்ள இலக்கண நூல்களை யெல் லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றினுஞ் சிறக்க அகத்திய னாரும் தாமோரிலக்கணம் இயற்றினார் போலும்.

ஆசிரியர் அகத்தியனார் செய்த அகத்தியமன்றிச் செய்யு ளிலக்கண முணர்த்தும் நூல்கள் தமிழிற்பல. அவை மாபுரா ணம், பூதபுராணம், தொல்காப்பியம், பல்காப்பியம், யாப்பியல், சங்கயாப்பு, பாட்டியன்மரபு, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கம் முதலாயின வும், பல்காயனார், காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினி யார், அவிநயர், நக்கீரர், நற்றத்தர், மயேச்சுரர் முதலாயினார் இயற்றிய நூல்களுமாம். இவற்றுள் மாபுராணமும் பூதபுராண மும் அகத்தியம்போல இயல்இசை நாடகம் மூன்றுமுணர்த்தின போலும். தொல்காப்பியமும் வீரசோழியமும் இலக்கணவிளக் கமும் எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் இயற் றமிழிலக்கணம் ஐந்து முணர்த்துவன. எஞ்சியவற்றுள் அவிநய மொழிய ஏனைய செய்யுளிலக்கண மொன்றே உணர்த்துவன. அவிநயம் யாப்பேயன்றிச் சொல்லிலக்கணமு முணர்த்தினமை

திணைபான் மரபு வினைச்செப் பிடஞ்சொல்
இணையா வழுத்தொகையோ டெச்சம்—அணையாக்
கவினையார் வேற்றுமையுங் கால்மயக்குங்கொண்
டவினயனா ராராய்ந்தார் சொல்.

என்னும் வெண்பாவாற் பெறப்படும்.

இந்நூல்களுள் இப்போதுள்ளன சில; பல இறந்தொழிந்தன. இக்காரணத்தினால் மாபுராணம், பூதபுராணம், யாப்பியல், சங்க யாப்பு, பாட்டியன்மரபு முதலிய நூல்களியற்றினார் பெயரும், பல்காயனார் அவிநயனார் முதலியோர் இயற்றிய நூல்கள் எவ்வெவ் விலக்கண முணர்த்தின வென்பதும் புலப்படவில்லை. யாப்பிலக்கண முணர்த்தும் நூல்கள் இப்போதுள்ளனவற்றுள் மிகப்பழையது தொல்காப்பியம். இதற்குரை செய்தார் பலர். அவர்கள் செய்தவுரைகளுள் தொல்காப்பியச் செய்யுளியற்கு மூன்றுரையுள்ளன; அவை உரையாசிரியர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் மூவராலும் இயற்றப்பட்டன. இவற்றுள் பேராசிரியருரை முன்னரே அச்சிடப்பட்டுள்ளது; நச்சினார்க்கினியருரை இப்போது அச்சிடப்பட்டு வருகின்றது; உரையாசிரியருரை இன்னும் அச்சிடப்படவில்லை. தொல்காப்பியச் செய்யுளியலும் அதன் உரைகளும் மிக உபயோகமானவை. யாப்பிலக்கணத்தில் வழங்கும் பெயர்களுக்குக் காரணமும் பாக்களுக்குக் கூறப்பட்ட ஓசை விகற்பங்களும் வேறுபலவும் இப்போது இவற்றாலேயே அறியக்கிடக்கின்றன.

தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டது யாப்பருங்கலம். இது சமணராற் செய்யப்பட்டது. இது தொல்காப்பியத்தை முற்றுந்தழுவாது, அதனோடு சிறிது மாறுபட்டு, காக்கை பாடினியத்தைப் பின்பற்றிச் செல்லும். அது தொல்காப்பியர் போல நேர்அசை நிரைஅசை வேண்டாது, காக்கை பாடினியார் போல நாலசைப்பொதுச்சீர் வேண்டுவதனாலும், தாழிசை துறை விருத்தங்களைத் தொல்காப்பியர்போலக் கொச்சகக்கலிப்பாற் படுத்தாது பாவினங்களென வகுப்பதனாலும் பிறவாற்றாலும் பெறப்படும். இஃது ஒரு சிறந்த நூல். இதன் பெருமை

சொல்லிற் சுருங்கிப் பொருள்பெருகித் தொன்ஞானம்
எல்லாம் விளங்கி யிருளகற்றும்—நல்யாப்
பருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி
ஒருங்கறிய வல்லா ருணர்ந்து.

என்று சான்றோர் கூறிய வெண்பாவானினிது விளங்கும்.

இதற்கு யாப்பருங்கலவிருத்தி என்று பெயருள ஒரு விரிவுரை யுளது.

யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலத்திற்கு அங்கமாயுள் ளது. இஃது அதன் பெயராலே விளங்கும். காரிகைக்கு உரை யெழுதிய குணசாகரர் அதனை அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பதுபோல யாப்பருங்கல மென்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்கார முடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக் காரிகை யென்னும் பெயர்த்தாயிற்று என்பர். இந்நூல் செய் தார் ஆரியை யென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக் கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமுத சாகர ரென்னு மாசிரியர் என்று அதன் உரையாசிரியராகிய குணசாகரர் கூறுவர். இவர் ஆரியா சப்தசதி என்னும் வட நூலை மொழி பெயர்த்தார் போலும். யாப்பருங்கலஞ் செய் தாரும் இவ்வமுதசாகரரே. அதன் பாயிரம்.

> யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
> தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த
> துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
> அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே.

என்று கூறும். பாயிரத்திற் குரையெழுதினோர் கடற்பெயர் அருந்தவத்தோன் யாரென்று கூறிற்றிலர். "அவர் விரவியு மருகியும் வேறு மொரோவழி—மருவியும் பெறாது வழங்கு மன்னவையே" என்னுஞ் சீரோத்துச் சூத்திரத்துரையுள் "இந் நூலுடையாரும், மாஞ்சீர்கலியுட்புகா" என்னும் புறநடையானும் பிறவாற்றானும் * * * விளங்கக் கூறினோர்" என்பதனால் யாப் பருங்கலம் செய்தாரே காரிகை செய்தவரும் என்பது விளங்க வைத்தார். 'மாஞ்சீர்கலியுட் புகா' வென்பது. யாப்பருங்கலக் காரிகை ஒழிபியல் மூன்றாவது காரிகை.

பாயிரங் கூறினவர் நூலாசிரியர் பெயரை மொழிபெயர்த் துத் தமிழில் "அளப்பருங் கடற்பெயரருந் தவத்தோன்" என்று கூறினாராயின், நூலாசிரியர் பெயரை அமிதசாகரரென்று

எழுதவேண்டும், அமிதம் அளவில்லாதது; சாகரம் கடல். ஏட்டில் அமித சாகரரென்றிருந்ததைப் பின்னுள்ளோர் அமிர்த சாகரரென்றும் அமுதசாகரரென்றுங் கொண்டிருக்கலாம்.

வீரசோழியத்திற் குறையியற்றிய பெருந்தேவனாரும் யாப்புப் படலத்தில் "துன்னுங்குறளடி" என்றற்றொடக்கத்துப் பத்தொன்பதாஞ் செய்யுளையு மதனுரையையும் அணிமை பெறச் சேர்த்துக் காட்டாதும், சில விடங்களில் மூலபாடத்தை விரித்துரையாது பொருளை மாத்திரம் முடித்தும், சில விடங்களில் நூலாசிரியர் போக்கினையும் நோக்கினையுங் கருதாது வேறு பொருள் கொண்டு முடித்தும் இருக்கின்றார். இக்குறைபாடுகளை நோக்கி இதற்கொரு புத்துரை இயற்றியுள்ளார நல்லிசைப் புலமை வாய்ந்த யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப் புலவர். இவ்வுரை காரிகைகளைப் பிரித்து, முடிபுகளைத் தெரித்து, பொருளை வரையறுத்து, அதற்கின்றியமையாதவைகளை எடுத்துக்கூறி, உதாரணங்கள் இலக்கணமமைந்து கிடக்குமாற்றைப் புலப்படக்காட்டி, செய்யுளுறுப்பாதியவற்றின் பெயர்க்காரணங்களை விளக்கிச் செல்கின்றது. இவ்வுரையில் நூலின் மூலபாடமும் உதாரணமும்நாமெடுத்தோதிச் செல்வதோடு இனிய கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்டு எளிதிற் பாடம் பண்ணிக்கொள்ளற் கேற்ற தாயமைந்துள்ளது. இதன் சுருக்கமும தெளிவும் இனிமையுமே இது யாவராலும் பாராட்டப்பட்டு வருவதற்குக் காரணம். இக்காலத்துத் தமிழ் யாப்பிலக்கணம் கற்பார் கற்கும் நூல் இதுவே.

இதற்குப் பழையதோ ருரையுண்டு. அது குணசாகரரென்பவராற் செய்யப்பட்டது. இவ்வுரையாசிரியர் இந்த இலக்கணத்திற்கு இஃது எடுத்துக்காட்டென்று கற்போர் எளிதில் அறிந்து கொள்ள இலக்கணங்களையும் எடுத்துக்காட்டிக் காரிகையுரையில் 'மிக்குங் குறைந்தும் வரினுமொருபுடை யொப்புமை நோக்கி யொழிந்தவுங்கொளலே' என்றார் அமுதசாகரனார் என்று யாப்பருங்கலஞ் செய்தார் அமுதசாகரனார் என்பது புலப்பட யாப்பருங்கலத்து ஒழிபியலோத்துச் சூத்திரத்தை எடுத்து மேற்கோளுங் காட்டினர்.

ங்கும்

யாப்பருங்கலக் காரிகை சிறு நூலாயினும் மிகச் சிறந்தது. அது யாப்பிலக்கணப் பொருளாக ளெல்லாமடங்க மிகச்சுருங்கின சொல்லால் தொகுத்தும்வகுத்தும் செய்யப்பட்டு உதாரணங்கள் பிழையறப் பரிசோதித்துத்திருத்தப்பட்டிருக்கின்றது; மூலத்தில் நிரனிறையாகக் கூறியனவெல்லாம் வேறு வேறு பிரித்து இதற் கிதுவென விரைந்து புலப்படுமாறு விளக்கப்பட்டிருக்கின்றன; குணசாகரருரையில் விதந்து கூறுத கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா முதலியவைகள் எவ்வெப்பா வினங்களின் பாற் பட்டனவென்பதும், அவற்றின் இலக்கணங்கள் யாவை என்பதும் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன; சில புத்துதாரணங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குணசாகரர் தம்முரையிலே காரிகை மூலபாடத்தோடு சேர்க்காது ஓர் உரைச்சூத்திரமாக எடுத்துக்கூறிய "தூங்கேந்தடுக்கு" என்னும் வண்ணவிகற்ப முணர்த்துங் காரிகை உள்ளவாறு மூலத் தோடு சேர்த்து உரை கூறப்பட்டுள்ளது. இக்காரிகைக் குறை கூறுமிடத்துத் தொல்காப்பியனார் கூறிய பாஅவண்ணம் முதலிய இருபது வண்ணங்களும் அவிநயனார் கூறிய குறிலகவற்றூங் கிசை வண்ண முதலிய நூறு வண்ணங்களும் உதாரணங்க ளோடு எடுத்துக்காட்டி விளக்கப்பட்டதோடு தமிழ் நூலிற் கூறப்படும் வண்ணத்திற்கும் வடநூலிற் கூறப்படும் சந்தத் திற்கு முள்ள வேற்றுமையும் தாண்டகத்தினிலக்கணமும் சொல் லப்பட்டிருக்கின்றன.

காரிகைக்கு முதலில் உரை எழுதிய குணசாகரரை யாப் பருங்கலத்தின் பாயிரச் சூத்திரத்தில் அமுதசாகரருக்கு ஆசிரி யராகக்கூறிய குணசாகரரென்றும், ஆதலால் அமுதசாகரரோ டொரு காலத்திருந்தவரென்றும் அவருக்குற்ற நண்பினரென் றும் ஒருவர் கொண்டார். அது பொருந்தாது. இவர் பெய ரும் குணசாகர ரென்றிருத்தல் பற்றி இருவரையும் ஒருவராகக் கொள்ளலமையாது. அமுத சாகரரியற்றிய "தூங்கேந்தடுக்கு" என்றற்றொடக்கத்துக் காரிகையை மூலத்தோடு சேர்க்கத்தவ றினமையானும் "அந்தமில்பாதம்" "எழுவாயெழுத்தொன்றின் மோனை" என்றற்றொடக்கத்துக் காரிகைகளுக்கும் பிறவற்றிற்

கும் நூலாசிரியர் கருத்திற்கேற்க உரை கூறுமையானும் பிற வாற்றானும் உரையாசிரியராகிய குணசாகரர் நூலாசிரியராகிய அமுதசாகரரோடொரு காலத்தினரல்லரென்பதும் வெகு காலத்திற்குப் பிற்பட்டவரென்பதும் இனிது புலப்படும்.

வீரசோழியம் யாப்பருங் கலத்திற்கும் காரிகைக்கும் பிற் பட்டது. அது வீரசோழியமியற்றிய புத்தமித்திரனாரோடு ஓரே காலத்தினராக எண்ணப்படும் அதன் உரையாசிரியராகிய பெருந்தேவனார் தமதுரையில் யாப்பருங்கலச் சூத்திரத்தினை எடுத்து மேற்கோள் காட்டியதனால் விளங்கும். இந்நூலுடை யார் யாப்பிலக்கணங் கூறுமிடத்து வடமொழி யிலக்கணத்தைக் கொண்டு வந்து நுழைத்து, சீருந் தூக்குங் கருவியாக அடிவகுக் காது எதுகை கருவியாக அடி வகுத்து, பாக்களை ஓசைபற்றி வகுக்காது அடி பற்றி வகுத்துத் தொல்லாசிரியரோடு மாறு படக்கூறுவர்.

இலக்கண விளக்கமும் சிதம்பரப்பாட்டியலும் பிற்காலத்து நூல்கள். இவைகளிரண்டும் அச்சிடப்பட்டுள்ளன. இலக்கண விளக்கமச்சிட்டவர் வீரசோழியம், இறையனாரகப் பொருள், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி முதலிய பழந்தமிழ் நூல்கள் அச்சிட்ட யாழ்ப்பாணத்து ஸ்ரீமான் சி. வை. தாமோ தரம் பிள்ளையவர்கள். சிதம்பரப்பாட்டிய லச்சிட்டவர் செந் தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீமத் மு. இராகவையங்கார். இலக்கண விளக்கமியற்றினவர் திருவாரூரில் திருக்கூட்டத்தில் தமிழ்க் கிலக்காகிய வைத்தியநாத தேசிகர். சிதம்பரப்பாட்டியல் செய் தார் பரஞ்சோதியா ரென்பார். இந்நூல்கள் பெரும்பாலும் யாப்பருங்கலத்தையும் காரிகையையும் தழுவிச்செல்வன. விதந் தெடுத்துக் கூறத்தக்க சிறப்பமைந்தனவல்ல.

நூலாராய்ச்சிக்கு யாப்பிலக்கணவறிவு இன்றியமையாதது. பழந்தமிழ் நூல்கள்பலவும் இன்னும் அச்சில்வராது ஏட்டி லேயே யிருக்கின்றன. ஏட்டிலெழுத்துப் புள்ளியிட்டெழுதப் படாதது. அவ்வெழுத்திலுள்ள பாக்களின் உண்மைப் பாடங் களைக் கண்டு கொள்வதற்கு யாப்பிலக்கண வுணர்ச்சி ஒரு

தலையாக வேண்டும். அச்சில் வந்த நூல்களிலும் பலவற்றில் பாடங்கள் பிழைபடப்படித்து வழங்கப்பட்டு வருகின்றன. நெடுங்காலமாகத் தமிழ் நாடெங்கும் அன்போடு படித்து ஆலயங்களிலும் ஓதப்பட்டு வரும் தேவாரம் முதலிய திருப்பாடல்களுள்ளேயே இவ்வகைப் பிழைகள் காணப்படுமாயின், வழக்கு வீழ்ந்து கிடந்த எஞ்சிய பழந்தமிழ் நூல்களின் நிலைமையைச் சொல்லுவதென்? இப்பிழைகளுள் இரண்டொன்று காட்டுதும்:—

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் தேவாரம், திருநாகேச்சரம். "பொன்னேர் தருமேனியனே" என்றற் றொடக்கத்துப் பதிகத்தில் பதினொன்றும் பாட்டு மூன்றுமடி "நலமார் தருநாகேச்சரத்தரனே" என்றிருக்கற்பாலது "நலமார் தருநாகேச்சரத்தானே" என்றும்; திருவாவடுதுறை, நாலடிமேல் வைப்பு "இடரினும் தளரினும்" என்றற்றொடக்கத்துப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டினீற்றிலும் "ஆவடுதுறையரனே" என்றிருக்கற்பாலது "ஆவடுதுறையானே" என்றும், சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம், திருநாகேச்சரப்பதிகம், திருக்கடைக்காப் பொழிந்த ஒவ்வொரு பாட்டின் இறுதியடியிலும் திருக்கடைக்காப்பின் இரண்டாமடியிலும் "திருநாகேச்சரத்தரனே" என்றிருக்கற்பாலது "திருநாகேச்சரத்தானே" என்றும் படித்து அச்சிடப்பட்டுள்ளன. இப்பிழைகள தக்க யாப்பிலக்கண வுணர்ச்சியின்மையான் நேர்ந்தன வென்பது திண்ணம்.

---

# கம்பன் கவிச்சுவை யமைப்பு.

[தோரமங்கலம் A. வரதநஞ்சைய பிள்ளை.]

(௩௩௪-ம் பக்கத்தொடர்ச்சி)

மற்றைப்புலவர்கள் தாம் கருதிய பொருளை வெளிப்படக் கூறிச்செல்ல, நம்புலவர் பெருமானர், அவசியமான ஒரோரிடங்களில் கற்பவர் நுணுகிய மதியால் விளக்கிக் கொள்கவென்று

(குறிப்பாற் பொருளுணர்த்தி) உய்த்துணரவைப்பு என்னும் உத்தியால் விளக்காது செல்வார். அவற்றிற்கும் இரண்டொரு கவிகள் காட்டுதும். இராமனை வனத்திற் செல்ல விடுக்கத்தேர் மீதேற்றிச் சில தூரம் கொண்டு வந்து விட்டுத் திரும்பும் சுமந்திரன், அரண்மனையிலுள்ளார்க்கு விளம்புதற்குரிய செய்திகள் ஏதேனும் உளதா என இராமனையும், சீதையையும் தனித்தனி வினவி, அவர்கள் சொன்னவற்றைக்கேட்டுக் கொண்டு இளையவரை நோக்கி, நீர் ஏதாவது தெரிவிப்பதுண்டோ? என்று கேட்க அதற்கு இலக்குவன் கூறியதாக வருகிற,

"மின்னுடன் பிறந்தவாட்பரத வேந்தற்கு
மன்னுடன் பிறந்திலென் மண்கொண் டாள்கின்ற
தன்னுடன் பிறந்திலென் றம்பி முன்னலேன்
என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால்".

என்னும் கவி, விளக்க வேண்டிய கருத்தைக்குறிப்பாலுணர்த்துகின்றது. எங்ஙனமெனின், 'ஐயா! சுமந்திரரே! நீர் பரதச் சக்கிரவர்த்தியார் அவர்கட்கு, இலக்குவனாகிய நான் இராமனோடும் பிறக்கவில்லை. அவனுக்குரிய அரசாட்சியை வலிதில் பெற்று ஆளுகின்ற தன் (அப்பரத)னுடனும் பிறந்தேனல்லேன். என் தம்பியாகிய சத்துருக்கனுக்கு முன் பிறந்தவனுமல்லேன். ஆகவே நான் பிறக்கும் போது என்னுடனே பிறந்தேன். (வேறொருவரையும் நம்பிப்பிறந்தேனில்லேன்) அங்ஙனமாயினும் யான் க்ஷேமமாகவும் வீரத்தோடும் தான் இருக்கின்றேன் என்று தயை செய்து கூறுங்கள். இதுவே யான் சொல்ல விரும்பிய செய்தி' என்று மொழிந்தனன் என்னும் பொருளே இக்கவியால் விளக்கப்பட்டது. இலக்குவன், இராமன் முதலானவர்களுடன் பிறக்கவில்லையென்று இவ்வளவு கடுமையாகச் சினந்து கூறுவது பரதன் மேலுள்ள பெரிய வெறுப்பால் என்பதறிகின்றோம். எவ்வெக்காரணங்கள் கொண்டு அவர்களுடன் தான் பிறந்திலேன் என்று கூறினான் என்பது, கற்றோர் கருதிக் காண்டற்குரியதாயிறறு

இலக்குவன் இராமனுடன் பிறந்தவனாக இருப்பின் அவ

னது இயற்கை போலவே, மெய்த்திருப்பதமேவு என்ற போதி னும், இத்திருத்துறந்து ஏகென்ற போதும் ஒத்து இருக்கும் உள்ளச்செம்மை தனக்கும் வாய்த்துத் துன்பமுறுமல் அமைதி பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி ஐயன் கானுறையக் கடவனே? அவன் புனைதற்குரிய மகுடம் வஞ்சகத்தால் கவரப் படுமோ? இக்கொடுந்தீங்கும் யான் காணத்தகுவனே! என்று நெஞ்சு பறைகொட்ட நெட்டுயிர்த்துப் பெருந்துன்பத்தில் ஆழ் கின்றவனுக இருத்தலின் இராமனுக்கு உண்மையில் தம்பியாகப் பிறந்தானென்னற்கிடமில்லை. பின், முறை தவறி மூத்தவர்க் குரிய முழுநில ஆட்சியைக் கரவால் பெற்றுக்களிப்புற்று ஆள் வதற்குந் துணிந்து நின்ற பரதனுடன் பிறந்திருப்பின் அவன தியற்கை போல் இராமபிரான் விஷயத்தில் சிறிதும் இரங்காத கல்லைப்போற்றிணிந்த கடுஞ்சித்த மடைந்து அவன் கேட்டையே தனக்கு ஆக்கமாகக் கருதல் வேண்டும். அவ்வாறன்றி அவன் நிலைமை காணுந்தோறும் கண்ணீர் வாரக் கசிந்துருகி வெம்பும் உளத்தினனுதலின் அப்பரதனுக்கும் சகோதரனுதல் கூடா மையே. மற்று, சத்ருக்நனுக்குத் துணைவனுக இருப்பின் அவ னைப் போல், இராமன் நாடாண்டாலென்? காடு புகுந்தால் என்? பரதனே ஆளினும் ஆளாதொழியினும் நமக்காவது ஒன்றுமில்லை யென ஓர் திறப்படாது தன்னைத்தானே காதலித்து நாட்டில் இருத்தல் வேண்டும், அத்தகைய உரம் பெற்ற உள்ளமும் தான் பெருமை பற்றி அவனுக்கு முற்பிறந்தவனு மல்லாமை பெறப் பட்டது. இவ்வாற்றுல் இலக்குவன் இங்ஙனங் கூறித்தசரத னுடைய புத்திரர் நால்வருள் ஒவ்வொருவரியற்கையும் வெவ் வேறுயிருத்தலின் ஒருவருடன் ஒருவர் பிறந்தாரென்கை பொருந்ாது என்று கருதுவானுயினன். இங்ஙனங் கருதியது பரதன் மேற்பொங்கி யெழுந்த பெருஞ் சீற்றம் பற்றியே என் பதையும் கவி அழுத்தமாகக் கூறுகின்றுர். இலக்குவன் வாக்காக வைத்துப் பரதனை வேந்தன் என்றும் அவனது வாள் மின் னுடன் பிறந்தது என்றும் கூறிய கூற்றம், மண்கொண்டு மன்னவர் மன்னனுக அவன் எதிர் காலத்திற் பூதலங்காப்பானு வான். மூத்தவனை வனம் புகுத்தி வஞ்சனையால் அரசெய்தும்

சூழ்ச்சி அவனுக்குப் பிறவி இயற்கையாய் அமைந்தது என்பான் அதனை வாள் மேல் வைத்து 'மின்னுடன் பிறந்தவாள்' என்றான். எல்லா வாட்களும் உருவாக்கப்பட்டுச் சாணையினால் பின் ஒளி பிறக்கக் கூராக்கப்படும். இவனது வாள்மட்டும் தோன்றிய போதே சுடரும் கூர்மையுமாகத் தோன்றிற்றுப் போலும் என அவனது இழிதகவுணர்த்தியபடி. அப்பரதச் சக்கிரவர்த்தியாருக்கு இலக்குவனாகியயான் என்னுடன் யானைத் தனிப்படப் பிறந்தாலும் வேறுபடிக்கு அஞ்சும் கோழையேனாகி வலிகுன்றினேனுமல்லேன். துன்பப்படுவேனு மல்லேன் என்றுரைப பீராக எனச் சுமந்திரர்க் குரைப்பானாயினன். வலியன் என்ற சொல்=க்ஷேமமுடையேன், பலமுடையேன் எனத் தன்மை ஒருமையிலும், அவ்வாறே க்ஷேமமுடையவன் பலமுடையவனெனப் படர்க்கை ஆண்பாலினும் வரும். வேந்தன் என்னும் மொழி முடியுடை நெடுநில மன்னரை யுணர்த்தும். ஈண்டுப் "பரத வேந்தற்கு" என்று கவியுரைத்தது உரிய சொற்களைத் தக்க இடத்திற் பெய்து வைத்தமைக்க வேண்டுதலானென்க. இதைப்போலவே பாலகாண்டம் உண்டாட்டுப் படலத்திலும்,

'வளைபயின் முன்கையோர் மயில னுடனக்
கிளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணாலியே'

என்றொரு செய்யுள் வருகின்றது.

இதன் கருத்தாவது:—இராமன் மணவினை நிமித்தமாகத் தசரதனுடன் சென்று வழியில் இளைப்பாறத்தங்கிய வீரர்களில் இரண்டு மனைவிமார்களையுடைய ஒருவன் ஞாபக மறதியால் இளைய மனைவியின் பெயரைச் சொல்லி மூத்த மனைவியை விளித்தானாக, அதனைச் செவியுற்ற அம்மனைவி முதலிற் பற்கள் தோன்றச் சற்று நேரம் சிரித்தனள். உடனே எக்காரணத்தாலோ அவளது இருகண்களிலும் களகளவென்று கண்ணீர் பெருக முகம் வாடித் துன்பமுற்று வருந்தினாள் என்பதாம். சிரித்தல், என் கொண்டு? அது கோபத்தால் வந்ததுமன்று.

'முளையெயிறிலங் கிடமுறுவல் வந்தது' எனக்கவி கூறியவாற்றால ஒருவகைபற்றியே தோன்றியதாகல் வேண்டும். பின்பு அழுதாள் என்பது உவகையினால் வந்த ஆனந்தக் கண்ணீருமன்று. "களகளவென ஆலி உதிர்ந்தது" என்கிறார். ஆதலின் அக்கண்ணீர் புலம்பலிற் றோன்றியதே யாகற்பாலது. இங்ஙனம் முன் நகைத்ததற்கும் உடனே துக்கமுற்றழுததற்கும் பொருட்டு யாது? என்பதைக் கற்போரே உணர்தல் வேண்டும் எனக்கவி விளக்காமல் வாளாபோயினர்.

அம்மாது, தன் கணவன் இளையாளினும் தன் மேல் அதிக அன்புடையேனென்று பலகாற் கூறித் தன்னை நம்புவித்து வந்த பொய்ம்மை இன்று நன்கு புலப்பட்டதாகலின், எவ்வளவு மறைத்து வைப்பினும் உண்மை ஒரு சமயத்தில் வெளிப்பட்டே தீரும் என்கை இவன் அயர்ச்சியால் உண்மையை உரைத்தமை கொண்டு அறிகின்றாள். இனித்தான் அவனது பொய்ம்மைக்கு மயங்காமல் ஊடலுக்கு வழி தோன்றிற்று எனக்கருதி நகைத்தனள். என்றாலும், அந்தோ! முதல் மனைவியாகி இவனது இளம் பருவந் தொட்டே பன்னாள் காதலன்பு பூண்டிருந்த என்னினும், நேற்றுக் கைதொட்ட அவளது மோகம் தலைக்கேறி அவள் பாற் செறிந்த காமம் உள்ளம் முற்றுங் கவரப்பட்டுக் கண்கூடாக நேரில் இருக்கும் என்னை அவளாகவும் என் பெயரை அவள் பெயராகவும் கூறி இவ்வளவு மெய்மறப்பவனாக இவன் இருப்பானேல் யான் அவ்விளையாளினும் மிக இழிதகவுடையவளாகவன்றோ ஆயினேன். பெருங்காதல் எங்குண்டு? அங்கன்றோ பேரின்பப் பெருவாழ்க்கையும் உண்டு. இருவர் பாலும் சமமான அன்பு காட்ட வேண்டிய தலைவன், என்னினும் இளம் பருவமுடையா ளென்பதனாலே யன்றோ அவள் பால் அத்துணைப் பெருங்காமமுடையவனாகின்றான். என் கட்டிளமையும் இவன் நுகர்ந்து கழிக்கப்பட்டதன்றோ? இங்ஙனம் தன்னை நம்பி ஒழுக வல்லாரை வஞ்சித்தொழுகிக் காதலியாமை எவ்வளவு வருத்தந் தருவதாகின்றது? என்னவோ? என் ஊழ் இங்ஙனம் இருந்தது எனக்கருதினள் வெம்பி ஏங்கி மெலிந்தழுவாளாயினள் எனக் கருதிக் கோடல் வேண்டிற்று. (தொடரும்)

# நக்கீரனார்

## தெய்வப் புலமைமாட்சி

[சுவாமி வேதாசலம் ~~பிள்ளை~~ அவர்கள்]

"தன்றோ னான்கி னொன்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே."

முகவுரை.

செழுந்தமி ழென்னுங் கொழுந்தமிழ்க் குழவியை
மன்றினுட் குனிக்குங் கொன்றையஞ் சடையோன்
மறுமுனி தவத்திற் குறுமுனிக் கருள
வாங்கவ னினிதெழுந் தேற்றுப் பாங்குறக்
குறங்கினி லிரீஇ வெரிந்புறந் தைவந்
தியல்வகை யென்னும் பயில்பா லூட்டிச்
சின்னாள் வளர்த்த பின்னர் மன்னிய
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்
பீடுற வமர்ந்த கூடன்மா நகரின்
மெய்பெற விருந்த தெய்வப் புலமைப்
பெருமதிப் புலவோர்க் கருவையி னுதவ, வவரு
முளந்துளும் புவகையி னலம்பெற வேற்று
நூற்பொரு ளென்னுஞ் சீர்க்கலன் செறித்து
நூலெனு மாடையும் வாலரைக் கொளீஇச்
சொற்சுவை பொருட்சுவை கனிந்த பற்ப
னல்லுணா நாடொறும் பல்வே றூட்டிச்
சங்க மென்னும் பொங்குபூந் தடத்தினு
மாலவா யென்னுங் கோலமார் காவினும்
வடமொழி யென்னு மடங்கெழு தோழியொடு
முடம்படுத் தொருங்கு விடுப்பக் குடம்புரை
கொங்கைப் பொறைகெழு கொழுந்தமிழ் மங்கை
யானா வேட்கையி னாடி மேனாட்
கீர னாவிற் சீரிதி னமர்ந்தனள்
கவின்கெழு திருமக ணறும்பொதி யவிழ்க்குங்
கொழுந்தா மரையின் மேவி
யெழுந்தினி திருந்த வியல்பினா லெனவே.

இத்துணைப் பெருஞ்சிறப்பு மொருங்கு வாய்ப்பப் பெற்றுக் கடைச்சங்கத்துத் தலைமைப் புலமைத்திற மேற்கொண்டு பொலிந்த ஆசிரியர் நக்கீரனார் பெருமை யொருநாவுடைய வொருவரா லெடுத்தொரு துறைப்படுத்துரைக்கப்படும் நீரதன்று. ஆயினும், பிற்காலத்தாரிற் சிலர் இவ்வாசிரியருரைவழக்கொடு முரணியவ்வுரையிற் குற்றங் காண்டலும், அங்ஙனங் குற்றங் கண்டார்க்குத் துணை நின்று அவருரை நிறுத்துதற் பொருட்டு ஆசிரியர் தெய்வப் புலமைத்திறத்தை யிழித்துக்கூறி யங்ஙனங் கூறுதலாற் கழுவாயின்றிக் கருநெறி நரகிற் கிடந்துழலுதற் கேதுவாகிய பெரியதோர் அபசாரம் புரிந்து வருதலும் பல்கித் தாங்கெடுதலல்லாமலுந் தம்மைச்சார்ந்த அறிவின் மாந்தர்க்கு மங்ஙனஞ் செய்யக் கற்பித்து ஆரவாரஞ் செய்தலின், அச்செருக்குரையாளர் மறுக்க மொழியவும் நல்லறிவாளர் நயப்பது வேண்டியும் ஆசிரியர் நக்கீரனார் வரலாறும், அவர் தெய்வப் புலவரென்பதும், அவரருளிச்செய்த நூல் வரலாறும், களவியலுரை யிவர் கண்டதன்றென்பா ருரைக்குமாறும், அங்ஙனங் கூறுவாருரை பொருந்தா தென்பதும், பிற்காலத்தா ரிவருரையி லிலக்கண வழுவாராய்ந்தவாறும், அவ்வாராய்ச்சி பயனில் புல்லுரையேயா மென்பதும் பிறவுந்தந்து காட்டி முடித்தலை நுதலியெடுத்துக் கொள்ளப்பட்ட திவ்வுரை யென்பது.

## நக்கீரனார் வரலாறு.

இவர் ஆண்டாண்டு 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்று கூறப்படுதலானும், பொருளதிகார வுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவரைப் 'புலவுத்துறந்த பொய்யா நோன்பினர்' என்றெழுதலானும் இவர் சைவவேளாளரிற் கணக்கர் வகுப்பிற் பிறந்தவரென்பது பெறப்படும். இனியிவரைச் 'சங்கறுப்ப தெங்கள் குலம்' எனுஞ்செய்யுளே பற்றி யக்குலத்தினரென்பாரு முளர்; இவ்வரலாறு ஆன்றோர் நூலுரைகளிற் காணப்படாமையானும் இதனை நிறுத்தும் வேறு பிரமாணங்கள் வேறொருவாற்றாற் பெறப்படாமையானும், தொல்லாசிரியர் மெய்யுரையொடு மாறுபடுதலானும் அங்ஙனங் கூறு

வாருரை வறிதாமென் றொழிக. இவர் பிறந்தவூர் மதுரைமா நகரேயாம். இவர் இளம் பிராயத்தில் யாங்ஙன மொழுகினா ரென்பதும், இவரது விசேட வுரிமைக்குணங்களும், இவர் எக் காலத்து எவ்வரசன் அரசாண்டபோது சங்கமேறியிருந்து தமி ழாராய்ந்தா ரென்பதும் பிறவும் ஒருதலையாகத் துணிந்துரைக்கு மெய்ந்நூற் பொருள் காணாமையான் அவையினிது விளங்கா. இனியிவர் சங்கமேறி யிருந்து தமிழாராய்ந்த ஞான்று இவ ரைக்குறித் தெழுந்த வரலாறும் ஒரோர் நூலில் ஒரொருவாறாய் ஒன்றோடொன்று மலைவுபட நிகழ்த்தப்படுதலினதுவு மொரு நெறிப்படாதாயிற்று. அதுவும் அவ்வந்நூலிற் கிடந்தவாறே யீண்டெடுத்துக் காட்டுதும்.

## திருவிளையாடற் புராணம்.

வங்கிய சூடாமணி யென்னும் சண்பகமாறன் மதுரையிற் செங்கோலோச்சி வருநாளில் ஒரு முறை மரங்களும் புதல்களுங் கொடிகளுங் குழைத்து அரும்பவும் தென்றற்காற்றுப் பொதிய மலைச் சாந்தத்தின் நறுமணத்தை அளவிக்கொண்டு மலர் முகை களின் முழுநெறி யவிழ்த்து வண்டினம் யாழினுந் தீவியவாக ஒலிப்ப மெல்லிதின் வீசவும் இளவேனிற் காலம் வந்தது. அக் காலத்து ஒரு நாள், சண்பகமாறன் தன் மனைவியோடு ஓரிள மரக்காவிற் புகுந்து ஆண்டுள்ள செய்குன்றின் மேல் வேறு இருந்தான். இருப்ப, மெல்லிதின் வீசுந்தென்றற்காற்றுப் பண்டு போற்கமழாது வேறொரு தன்மைப்படக்கமழ்ந்தது. கமழ்தலுஞ் சிந்திப்பான், "என்னை! இம்மணம் இளமரக்காவின் வாயவிழ்ந்த மலர்களின் மணமன்று, காற்றுக்கு இயற்கையில் மணமில்லாமையின் அதற்குரியது மன்று, இருந்த வாற்றான் ஈதொரு வேறு தன்மைத்தான மணம்" என்றிவ்வா றெல்லா மெண்ணித் திரும்பித்தன் மனைவியை நோக்கினான். நோக்கி னாற்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் கூந்தன் மணமாயிருந்தது. அம் மணம் தன் மனைவியின் கருநெறிக் குழலிலிருந்து மிக வினியதாகக் கமழ்ந்தது. பின்னர், 'இம்மணம் இவள் கூந்தற் கியல்பினமைந்ததோ, அன்றிப்பூவும் நறுங்கூட்டும் இடப்படுத

விற் செயற்கையானமைந்ததோ, யான் கொண்ட இவ் வையுறவை யுணர்ந்து செய்யுள் செய்ய வல்லார்க்கு ஆயிரம் பொன் றருவேன்' என்று கோவில் புகுந்து அவன் தான் எண்ணியவாறே பொன் முடிந்த கிழியைக் கொணர்வித்துச் சங்கப்புலவர் முன் றூக்கி ஞன். இதனைக் கண்ட சங்கப்புலவர் தம்மிற்றனித்தனி தேர்ந்து தாந்தாங் கண்டவாறே செய்யுள் செய்துரைப்ப அவை யொன் றும் பொருளில வாதலேக்கிப் பெரிதும் எய்த்துக் கவலுறு வாராயினர். இஃதிவ்வாறிருப்ப, ஆதிசைவர் மரபிற் பிறந்து, இளம்பருவத்தே தன்றந்தை தாயொழியப் பிரமசரிய நிலைமேற் கொண்டொழுகும் தருமியென்னு மிளைஞன்தான் வதுவையயர்ந்து கொள்ளும் பெரு வேட்கையால் ஆலவாயி லவிர்சடைக் கடவுள் திருமுன் போந்து குறையிரப்பான் : "எந்தையே! அடியேன் தந்தைதாயரைச் சிறுபருவத்தே யிழந்தேன் ; இப்போது புது மணங்கூடும் வேட்கையேன் ; ஐயனே! என் மனக்கவலை தீர்த் தருளுதற்கு இது பதம்! இல்லறத்தொடு படுதலின்றி யெளி யேன் நின்றிருவடிக்கு அருச்சனை செயற்பாலனே, அல்லனே! நீ எல்லாமறிதி! பாண்டியன் மனக்கோள் உணர்ந்தடியே னுய் தற்பொருட்டு ஒரு செய்யுளியற்றித் தருக" என்றிவ்வாறெல்லா மிரந்து வேண்டுதலும், சிவபெருமானிரங்கிக் "கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ்செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறி யெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" எனுஞ்செய்யுளை யியற்றி நல்க, அதனைக்கொண்டு போந்து சங் கப்புலவர் கையிற் கொடுப்ப, அவரும் அச்செய்யுட் சொல்வள மும் பொருள்வளமு மாய்ந்து பார்த்து 'நல்ல! நல்ல!' என்று மகிழ்ந்தார். மகிழ்ந்து பாண்டியன் முன்சென் றவருரைப்பப் பாண்டியனுஞ் செய்யுட்பொருள் தன் கருத்தோடியைதலிற் பெரிது முவந்து 'புலவரொடுஞ் சென்று தமிழ் கொணர்ந்த வேதியன் ஆயிரம் பொன்னும் பெறுக' வென்று கூறி நல்கினன். அவ்வாறு வேந்தன் நல்குதலும் அவைப் புறத்துத் தூக்கிய பொற் கிழியை யறுக்கப்புகுந்த வேதியனை நக்கீரனர் விலக்கி யிச்செய்யுளிற் குற்றமுளதென்றார். என்றலும் வேதியன் மிக

வருந்திக் கொணர்ந்த செய்யுளைச் சிவ பெருமான் திருமுன் வைத்து "ஐயனே! வறுமையாலடியேன் படுந்துயர் குறிக் கொள்ளேன், நின்னுளுஞ் சிற்றறிவு முடையபுலவர் பேரறிவும் பெருந் தன்மையு முடைய நின்செய்யுளிற் குற்றங் காண்பதே, அதுவன்றியும் நின்னை நன்கு மதிப்பாரு மிலராவரே, இவ்வாறு நிகழ்ந்த இவ்விளிவரவு நினக்குறுவதன்றி எனக்கொன்றுமில்லை' என்று மிகவிரங்கிக் கூறுதலும், சிவபெருமான் ஒரு புலவன் போல வடிவுகொண்டு வெளிப்பட்டுச் சங்கத்தார் வைகும் அவைக் களத்தைச்சேர்ந்து அவரை நோக்கி 'நமது செய்யுட்கு வழுவேற்றினர் யார்?' என்றார். உடனே, நக்கீரனார் சிறிதும் அஞ்சாது 'நாமே அச்செய்யுட்கு வழுவுரைத்தாம்' என்று ரைப்பச் சிவபெருமான் 'வழு வென்னை?' என்று வினவினர். வினுதலும், 'அதிற் சொல் வழுவின்று, மற்றுப்பொருள் வழு வுளதாம், என்னை? குழல் நறிதென்றல் கொழுவிய மலர்மணம் பெற்றுழியன்றிக் குழல்தானே யியல்பாகக் கமழுந்தன்மைத் தன்றாம்; அன்றாக, 'அரிவைகூந்தலி னறியவுமுளவோ' என்று அதற்கு இயல்பிலேயே விரைகமழுந் தன்மையுண்டென உலக வழக்கொடு மாறுகொண் டுரைத்தலி னென்பது' என்று விடுத் தார். அற்றேல், *நங்கைப் பெண்டிர்க்குங் குழன்மணஞ் செயற் கைத்தோ வென்றிறைவன் வினுதலும் அதுவு மவ்வாறே யென் றார். பின், வானர மகளிர்க்கும் அம் மணம் செயற்கைத்தோ வென, அதுவு மன்னதேயென்றார். அதன்பின், நீர் வழிபட் டேத்தும் திருக்காளத்தியப்பர் பாகத்தமர்ந்த ஞானப்பூங் கோதையார் ஈர்ங்குழலு மந்நீர்மை யதோவென அதுவு மந்நீரதே யென்றார் நக்கிரனார். இச்சொற் கேட்டலும் புரிசடைப் பெரு மான் எரிவிழித்திமைக்குந் தந்நுதல் விழிதிறப்ப, அதற்கு மஞ் சாராய் நக்கீரனார் பொய்விழி யிந்திரன் போல்நும் மெய்ம்முழு தும் விழியாயினுஞ் சிறிது மஞ்சேன், நும் பாடல்பொருட் குற்றமெய்தி வடுப்பட்டது தேற்றமே யென்றார். இதற்குண் மதிமுகிழ்ச் சடையோன் நுதல்விழிச் செந்தீ வீசிய வெப்பம்

---

* நங்கைப் பெண்டிரைப் பதுமினியென்றல் வடநூல் வழக்கு.

பொருது பொற்றாமரைத் தடத்துள் விழுந்தார் நக்கீரனார். சிவபெருமானும் தம்வடிவங் கரந்து மறைந்தார்.

இனி, ஏனைச் சங்கப்புலவ ரெல்லாரும் மெய்விதிர் விதிர்த்து உள்ளமுடைந்து, அரசு போகிய குடியும், விழுமிய நடுமணியிழந்த முத்துவடமும், அறிவின்மக்கள் கல்வியும், கொழுமதியில்லா வானும்போல், நக்கீரனாரை யிழக்கப் பெறுதலாற் பெரிதும் பொலி விழந்து வருந்தி 'இறைவனொடு வாதுசெய்த பிழையாங் ஙனந் தீருமோ? உய்வதேது' என்று எண்ணிப் பின்னர் ஒரு வாறு தேறுதலடைந்து சிவபெருமான் திருமுன்படைந்து 'அரக் கன் பொருப்பெடுத் தெய்திய விடரைப்போக்கிய இறைவனே; ஆலமுண்ட அண்ணலே! நல்லவுந் தீயவுமியற்றினார்க்கு நிரலே யின்பமுமீந்தவரை யுய்விக்கும் பேரருளினை, இங்ஙனம் ஒறுத்தது சால் புடையதாயினும், இப்போது அப்பிழையைப் பொறுத் தருள்க' என்று பெரிதுங் குறையிரப்ப, அருள்வள்ளலுவந்து பொற்றாமரைத் தடத்தருகிற் புலவர் குழாம் நடுவில் தோன்றி நின்று அருட்கண் நோக்குதலும் நக்கீரனார் பொறிபுலன் கர ணங்களெல்லாந் தூயவாகி யொளிவிரிக்குந் திப்பிய வடிவத் துடன் அன்புருவாய்க் கரையேறி வந்து பூங்கோதையார் தெய் வக்கூந்தலுக்குக் குறைகூறிய பொல்லா நாவுரையைத் திருக் காளத்தியப்பரன்றி வேறியார் பொறுப்பார்' என்று ஆழ வாராய்ந்து 'கைலைபாதி காளத்திபாதியந்தாதி' பாடியருளினர்; அப்போதே 'கோவப் பிரசாத'மும் 'பெருந்தேவபாணி' யும் 'திருவெழு கூற்றிருக்கை' யும் வேறுவேறியற்றிச் சிவபெருமான் றிருவடிமேற் சாத்தி நாவுரை குழற, மயிர்சிலிர்ப்ப, உள்ளங் குழைந்து உச்சிக்கூப்பிய கையுடன் பன்முறை குடந்தம்பட்டுத் தொழுதங்கிருந்தார். பின்னர்ச் சிலநாட் சென்று ஆலவாயி லழனிறக்கடவுள் குறுமுனிவனை யழைத்து நக்கீரனார்க்கு இலக் கண வுபதேசஞ் செய்வித்தனரென்று மிக விரித்துக்கூறும். இனி,

### சீகாளத்திப் புராணம்.

மதுரைமா நகரிற் பாண்டியன் செங்கோலோச்சு நாளில் நக்

கீரனார் முதலிய சான்றோர் இறைவனாற் கொடுத்தருளப்பட்ட தெய்வப்பலகை தம்புலமை வரம்பறிந்து நிலையிட்டிடந்தர அதன் மீதேறி யிருந்து செழுந்தமிழ் ஆராய்ந்திருந்தார். இவ்வாறிருப்ப ஒருநாட் பாண்டியன் தன் பொன்மாடத்து மேனிலைமேல் தன் ஆருயிர்க் காதலியொடும் அமர்ந்தான். ஆயகாலையில் இளந்தென்றல் அவ்வணங்கின் குழன் மணத்தை அளைந்துகொண்டு வீசப் பாண்டியனும் இது நம்மனைவி குழன்மணமென்று துணிந்து பின்றான் கருதிய விதனை யமைத்துச் செய்யுள் இயற்றும் புலவர் ஆயிரம் பொன் கொள்பவென்று அவ்வாயிரம் பொன்னையு முடிந்த கிழியொன்றைச் சங்கமண்டபத்தின் முன் தூக்கினான். இதனைக்கண்ட சங்கப்புலவ ரெல்லாருந் தாந்தாங்கண்டவாறே பொருளமைத்துப் பாண்டியனுக் குரைப்ப அவனுமவற்றை யெல்லாம் மறுத்துக் கூறினான். பொற்கிழி யறுப்பவரின்றி யிருந்தது. இவ்வாறிருப்பப் பாண்டிநாட்டில் மாரிவறண்டு கடுங்கதிர் வெம்மைமிகுந்து உலகமெல்லாம் பொறுக்கலாற்றாத கொடியதொரு வற்கட காலம் வந்தது. உயிர்களெல்லாம் உய்வது காணாமற் பெருந்துயருழந்தனர். அப்போது ஆலவாயி லவிர் சடைக்கடவுளைப் பூசித்து அருச்சிக்குந் தலைமையுடைய தருமி யென்னுமந்தணர் இனி நாம் உயிர் பிழைக்குமாறில்லை யாதலின் வளமலிந்த நாடுநோக்கிச் செல்லுதும எனத்துணிந்து சிவபெருமான் றிருமுன்படைந்து 'பெரும! இவ்விடத்தில் இனி யிருந்தாற் சாவேன், வேறுநாடு புகுந்து மழைவளஞ் சுரந்தபின் மீண்டு மிவ்விடமணைந்து நின்றிருவடித்தொழும்பியற்றுவேன்' என்று பிரிவதற்காற்றாது தொழுது அழுதார். 'அழுது அகங் குழையாதே, வழுதி தன்மனத்தடக்கிய பொரு டெரித்துச் செய்யுள் செய்வார்க்குத் தருதற் பொருட்டு ஆயிரம் பொன் முடிந்த கிழியொன்று தூக்கினான். அதனை யிச்செய்யுளறைந்து பெறுக' என்றருளிக் "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளை நல்கினார் ஆலவாயமர்ந்த வண்ணலார். நல்கியதனை யேற்றுப் பாண்டியன் முன் போந்து அவன் செவியிலவிழ்த்து, உகுத்தது போற் சொல்லலும், மற்றவனு மிதனைக்கொண்டு போய்ச் சங்கப்புலவர்க்குச் சொல்லியவரை யுடம்படுத்துக

வென்றான். அந்தணரும் புலவர் முன்னவ்வாறே போந்திசைப் பப் புலவரெல்லாரு முவக்கும் வழி, ஆங்கவருள் நக்கீரனார் 'இப்பாக்குற்ற முடைத்து' என்றார். என்றலும் வேதியன் றனுக்குற்றுக் கடவுளிடத்திதனைத் தெரிவிப்ப அவரும் புறம் போந்து புலவரை நோக்கி 'இதில் வழுவாராய்ந்தார் யார்?' என்று கேட்ப, நக்கீரனார் 'நான்' என அவர் 'குற்றமியாது' எனக்குழலுக்குச் செயற்கை மணமன்றி யியற்கை மணமிலதாக, அதனை யுள்ளது போறற் கூறுதலி னிஃதில்லது கூறலென்னுங் குற்றமா மென்றார் நக்கீரனார். இறைவனார் 'அரம்பையர் குழ லுஞ் செயற்கை மணத்ததோ' என, 'அதுவு மத்தகையதே' என்றார் நக்கீரனார். பின் இறைவனார், 'இறைவிகூந்த லெத் தன்மைத்து' என, 'அதுவுமத்தன்மைத்தே' என்றார் நக்கீர னார். உடனே இறைவன் நுதல்விழிதிறப்ப, 'யான் வடிவெலாங் கண்காட்டினு மஞ்சேன், அச்செய்யுளிற் குற்றங் குற்றமே' யென்றார் நக்கீரனார். பின்னர்ச் சிவபெருமான் 'எம்மொடு முரணி இமயம் பயந்த வுமை கூந்தலுக்குங் குறை சொல்லத் துணிந்தமையால், 'அறிவிலாய்! நீ குட்டநோய் கொண்டு வைய மெங்கும் அலைக' 'என நக்கீரனார் உடனடுங்கிக் 'கருணையங் கடலே! புழுத்தலை நாயினேன் கூறிய அறிபாப் பொய்யுரை பொறுத்தருளல் வேண்டும்' என்றுபலகா லிறைஞ்சி நாத்தழுத ழுப்ப வாழ்த்தினார். இவரது வழிபாட்டிற் கிரங்கி அத்தனார் 'இத்தொழுநோய் கயிலை காணிற்றீரும்' என்று மறைந்தார். பாண்டியன் முதலானோரும் இறைவன் றிருவிளையாடலை நினைந்து வியந்தார். தருமியென்னுமந்தணர் பொற்கிழி பெற்று வாழ்ந் தார். நாடுவறப்பு நீங்கி வளஞ்சுரந்தது. இதன்பின் நக்கீர னார்க்குத் தொழுநோய் முறுகி விரல் நிரை யழுகி விழுதல் முதலியன முறை முறை முதிர்ந்து பெருந்துயர் மிக்கது. நக்கீர னாரு மிதனைக் கயிலைகண்டு தீர்த்துக்கோடு மென்று ஊக்கிச்சங் கப்புலவர் மிகவருந்த அரிதிற் பிரிந்து புறம்போந்து பல நாடு, நகர், காடு, மலை, மரு நிலங்கடந்து காசி, திருக்கேதாரம் முத லிய வடநாட்டுச் சிவதலங்களைத் தரிசித்து, இமயமலைக்குச் செல் லும் வழியிற் செல்வார் கைகால் குறைந்து வெள்ளென்பு

தோன்ற மிகவரிதிற் பெயர்ந்து தாம் போம் வழியில் ஒரு பெரிய தடமொன்று கண்டார். அக்குளக்கரை ஒரு பெரிய ஆலமரம் நிற்ப அதனையடைந்து மனம் விரும்பிச் சிறிதிளைப் பாறினார். அங்ஙனமிருப்புழி, அம்மரக்கோட்டில் ஓரிலை யுதிர்ந்து ஒரு பாதி கரையிலும் பிறிதொரு பாதி நீரிலும்பட விழுந்தது, விழக் கரையில் விழுந்த பகுதி யொரு மீனுண் குருகாயும் நீரில் விழுந்த பகுதியதற்கிரையாம் மீனும் வடிவங் கொண்டொன்றை யொன்றீர்த்தன. (தொடரும்).

—ஞானபோதினி.

---

# அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை

(அ. மு. சரவண முதலியார்)

(௩௯௪-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பர் பெருமான் திருமறைக் காட்டிற் கதவு திறக்கப் பாடியமைக்குச் சான்று 'பண்ணினேர்' என்று தொடங்கும் திருமறைக் காட்டுப் பதிகமேயாகும். கதவு திறத்தற்கு,

"திறக்கப்பாடிய வென்னினும்"

என்று அடிகள் சொல்வதே போதிய சான்றாகும். திருஞான சம்பந்தர் பின் அடைக்கப் பாடியதும் இதனை வலியுறுத்தும்.

சிவபெருமான் திருநாவுக்கரசரைத் 'திருவாய்மூருக்கு வா' என்றதற்கு "எங்கே யென்னை" என்று தொடங்கும் அவ்வூர்த் திருக்குறுந்தொகையே தக்க சான்றாகும். அப்பதிகத்திலுள்ள,

"திறக்கப்பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்பப் பாடியடைப்பித்தா ருண்ணின்றார்"

என்னும் திருப்பாட்டே எம்பெருமக்களாகிய திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தவர் என எண்ணுதற்கு அகச்சான்றாகவுள்ளது. 'பாடி அடைப்பித்தார் ஞான சம்பந்தர் தான் எனக் கொள்ளுமாறு யாங்ஙனம்?' எனின்

"கதவந் திருக்காப்புக்கொளுங் கருத்தாலே" என அடைக்கப் பாடிய பதிகம் திருஞானசம்பந்தர் தேவாரத்துட் காணப்படு தலாலென்க.

வாகீசப் பெருந்தகையார் திருக்கயிலாயக் காட்சியைத் திருவையாற்றிற் கண்டமை 'மாதர் பிறைக்கண்ணியானை" என்று தொடங்குந் திருப்பதிகத்தின் குறிப்பால் அறியக் கிடக்கிறது.

திருப்பழையாறை வடதளியிலுள்ள பெருமானைச் சமணர்கள் மறைத்து வைத்திருந்தமையும், பின் அது நீங்கப்பெற்று, தாம் தரிசித்தமையும், "தலையெலாம் பறிக்கும்" என்று தொடங்கும் பதிகத்தா லறியப்படும்.

இனி, இவர் திருப்பூம்புகலூரில் உழவாரத் திருப்பணி செய்யுங்காலை பல சோதனைகள் செய்யப்பட்டமை 'பொய்ம் மாயப் பெருங்கடல்' என்று தொடங்குந் திருத்தாண்டகப் பதிகத்தாலும், இறுதியில் இறைவன் திருவடியாகிய வீடுபேற்றினை யெய்திய செய்தி 'எண்ணுகேன்' என்று தொடங்கும் பதிகத்தாலும் அறியப்படும்.

## (கூ) திருநாவுக்கரசர் காலம்

இவர் ஆறுவது நூற்றாண்டின் பிற்பகுதியிற் றோன்றி ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியில் இறைவன் திருவடி நீழலையடைந்தன,ரென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. கி. பி. 600 முதல் 625–30வரை ஆட்சிபுரிந்த மகேந்திர வர்மனென்பவனே இவரை நீற்றறையிலிட்டது முதல் பல துன்பங்களையுஞ் செய்தவன்.

அவன்மீண்டுந் திருநாவுக்கரசர் திருவடியை அடைந்து வணங்கிச் சைவனானெனவும், பின் பாடலிபுத்திரத்திலிருந்த சமணப் பள்ளிகளை இடித்துத் திருவதிகையிற் கோயிலெடுத்தானெனவும், அவன் சிறப்புப் பெயர்களுள் குணபரன் அல்லது குணதரன் என்பதும் ஒன்றாகலின், அத்திருக்கோயிலின் பெயரும் குணதரேச்சுரம் எனப்பட்டதெனவும் பெரியபுராணங் கூறுகின்றது. இம்மகேந்திரன் சமணமதத்திலிருந்து சைவச

மயம் புக்க உண்மையை அவன்காலத்து ஏற்பட்ட திருச்சிராப் பள்ளி வடமொழிக் கல்வெட்டு ஒன்று வலியுறுத்துகிறது. அதன் பொருளாவது :—

"லிங்கத்தை வழிபடுங் குணபரனென்னும் பெயரோடுகூடிய அரசன் இந்த லிங்கத்தினுல் (பெற்ற) விபட்ச விருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைநிற்பதாக."
என்பது. 'விபட்ச விருத்தி'—சமணமதம்.

இனி, திருநாவுக் கரசர் காலத்திலிருந்த ஏனைய நாயன் மார்களைத் திருஞான சம்பந்தரைப்பற்றிக் கூறுவதிற் காண்க. என்னை ? இருவரும் ஒரே காலத்தவராகலி னென்க.

(௧௦) திருநாவுக்கரசரின் தேவாரத்திற் காணப்படும் நாயன்மார்கள்

அப்பூதியடிகள், சண்டேசர், கோச் செங்கட் சோழர், சாக்கியர், கண்ணப்பர், கணம்புல்லர், திருஞான சம்பந்தர், அமர் நீதியார், நமிநந்தி யடிகளென்பார். இவருள், அப்பூதியடிகளை 'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பு மப்பூதி, குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்' என்பதனுலும், சண்டேசரைத் "தழைத்ததோர்" என்று தொடங்குந் திருப்பாவினுலும், பிற வற்ருலும், கோச்செங்கட் சோழரைச் 'சிலந்தியுமானைக் காவில்' என்று தொடங்குவதாலும் மற்றவையாலும், சாக்கியரைக் 'கல்லினு லெறிந்து' என்ற முதலையுடைய தாலும் பிறவாலும், கண்ணப்பரைக் 'காப்பதோர் வில்லு மம்பும்' என்று தொடங்குவதாலும் பிறவாலும் கணம்புல்லரை 'அணங்குமை பாகமாக' என்ற தலைப்புடைய தாலும் பிறவாலும், அமர் நீதியாரை 'நாட் கொண்ட தாமரை' என்று தொடங்கும் அருட்பாவினுலும், நமிநந்தியாரை 'ஆராய்ந் தடிந்தடித் தொண்டர்' என்னு முதலையுடைய பாவினுனும் அடிகள் கூறியருளுவது காண்க. பாட்டுக்கள் முழுதும் எழுதின் விரியுமென்று அஞ்சி விடுத்தேன். இவற்றுள் பல பாட்டுக்களில் அவ்வநாயன் மார்களின் வரலாற்றுண்மை காணப்படுகின்றது. அதனைத் திருமுறையில் அவ்வத் தலைப்பையுடைய அருட்பாக்களிற் காண்க.

## (கக) திருஞானசம்பந்தர்

திருஞான சம்பந்தர், ஆளுடைய பிள்ளையார் முதலிய பல பெயர்களையுடைய இவரது வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்துட் காண்க. 4286 செய்யுட்களையுடைய மேற்படி புராணத்தின்கண் திருஞான சம்பந்தர் புராண மட்டும் 1256 செய்யுட்களை யுடையதென்றால் அதன் விரிவுக்கு வேறு சான்று கூறவேண்டுமோ ?

இவர் வரலாற்றிற் காணப்படும் அற்புதங்களாவன ;—

க. கழுமலம் முதலிய பன்னிரண்டு பெயர்களையுடைய சீகாழியின் கண் முத்தமிழ் வேந்தருக்கு மூன்றாவது ஆண்டில் இறைவனும் இறைவியும் காட்சியளித்து ஞானப்பால் ஊட்டினா.

உ. திருக்கோலக்காவில் சிவபெருமான் இவருக்குப் பொற்றாளங்கொடுத்தருளினர்.

ந. திருவரத் துறையில் முத்துக்குடையும், முத்துச் சிவிகையும், முத்துச் சின்னங்களும் இறைவனால் அளிக்கப்பட்டன.

ச. திருப்பாச்சி லாச்சிராமத்தில் கொல்லி மழவன் புதல்வியினது முயலகன் என்னும் நோயைத் தீர்த்தருளியது.

ரு. திருக்கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்களுக்குண்டாகிய வெப்பு நோயை நீக்கியது.

சா. திருப் பட்டீச்சரத்தில் இறைவன் முத்துப்பந்தர் அருளியது.

எ. திருவாவடுதுறையில், தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டு ஆயிரம் பொன் அடங்கிய முடிப்பொன்றை இறைவனிடம் பெற்றது.

அ. திருமருகலில் பாம்பின்றற் கடியுண்டு இறந்த வணிகனொருவனைப் பிழைப்பித்தது.

கூ. திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றுப் பஞ்சம் நீங்குங்காறும் அடியார்கட்கு உணவளித்தது.

கo. திருமறைக் காட்டில் திருநாவுக்கரசராற் றிறக்கப்

பட்ட திருக்கதவம் அடைக்குமாறு பாடி அஃது என்றென்றும் அடைக்கவுந் திறக்கவு மாகுமாறு செய்தது.

கக. மதுரையின்கண் சமணர்களை வாதில் வென்றது.

கஉ. திருக்கொள்ளம் பூதூரில் திருப்பதிகத்தால் ஓடம் விடுத்தது.

கங. திருத்தெளிச் சேரிக்குப் போகும் வழியில் போதி மங்கை என்னும் ஊரிலிருந்து வழி மறித்த புத்தநந்தியின் தலையில், அடியாருளொருவர் ஆளுடைய பிள்ளையாரின் திருப்பதிக மொன்றைப்பாடி இடி வீழுமாறு செய்தது.

கச. திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது.

கரு. திரு மயிலையில் என்பைப் பெண்ணாக்கியது.

கசு. திருமணத்திற்குப் போந்த அனைவருக்கும் வீடருளியது.

இனி, இவற்றின் உண்மையை அகச்சான்று முதலிய கருவி கொண்டு நிரலே ஆராய்வோம்.

முதலாவதாகிய ஞானப்பாலுண்ட செய்தியைத் திருஞான சம்பந்தரே,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

எனக் கூறியருளுகின்றார். அன்றியும் இவர் ஆண்டவனருளைப் பெற்ற ஆண்மையில் தந் தாயாராகிய பகவதியார் பிறந்த பதியாகிய திருநனிபள்ளிக்கு ஆங்கிருந்து போந்து வேண்டிய மறையவர்களின் வேண்டுகோட் கிணங்கிப் போங்காலை, தந்தாதையாராகிய சிவபாத இருதயர் தம்மைத் தோளிலெடுத்துச் செல்ல, அதுபோது பாடிய "காரைகள் கூகைமுல்லை" என்று தொடங்குந் திருநனிபள்ளிப் பதிகத்திறுதியில்,

"கடல்வரை யோதமல்கு கழிகானல்பானல்
கமழ்காழி யென்று கருதப்

பலபொரு ளாறுநாலி மூளதாகவைத்த
பதியான ஞான முனிவன்
இடுமறை யொன்றவத்தர் பியன்மே
லிருந்தின் னிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடு மெந்தை நனிபள்ளியுள்க
வினைகெடுத லாணை நமதே”

என அருளிய அருட்பாவினால், அவர் பாடுங்கால் தந்தையார் தோளிலிருத்தற்குரிய அத்துணை இளம்பருவ மென்பதும், அப்பாட்டுகள் மறை முடிவின் கருத்துக்களை யுடையன வென்பதும், அவை இனிய இசைப்பாட்டுக ளென்பதும் பிறவுங் காண்க.

இவர் மதுரையில் சமணர்களுடன் வாது செய்யத் தொடங்குங்கால் இவரது இளம் பருவத்தைக் கண்டு அஞ்சிய மங்கையர்க்கரசியாரை நோக்கி,

“ மானினேர் விழிமாதராய் வழுதிக்கு மாபெருந்தேவிகேள்
பானல்வா யொருபால னீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்”

என்பதனாலும் இவர் இளமைப் பருவம் விளங்குவதாயிற்று.

“ கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டு செய்து”

எனத் தம்மிளமைப் பருவத்தினைக் குறிக்கின்றனர்.

இனி, “இவர் ஆண்டவ னருண் ஞானப்பாலை உண்டதைத் தாதை,‘யாரெச்சிலை நுகர்ந்தாய் ?’என வினவியபோழ்து, ‘தோடுடைய செவியன்’ என்று தொடங்கும் பதிகந்தான் பாடினாரெனக் கொள்ளுமாறு யாங்ஙனம்? அகச்சான் றில்லையே” என ஐயுறுவார் சிலர். அகச்சான் றில்லை யெனினும் முற்றத் துறந்த பட்டினத்தடிகள் திருக்கழுமலமும்மணிக் கோவையில்,

“ தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்ப முன்னின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை யவன்வயி னருள
அந்தணன் முனிந்து தந்தாரியா ரென
அவனைக்காட்டு வனப்ப வரனார்

தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட்டருளினையாங்கே''

என அருளினமை காண்க. இவர் ஒன்பதாவது நூற்றாண்டி லிருந்த வரகுண பாண்டியனைத் திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் 'பெரியவன் பின் வரகுண தேவரும்' எனப் பாராட்டி யிருப்பதால் அந்நூற்றாண்டுக்குப் பின்னும், பதினோராவது நூற்றாண்டி லிருந்த நம்பியாண்டார் நம்பிகள் இப்பட்டினத்தடிக ளியற்றிய நூல்களைத் திருமுறை பதினொன்றிற் சேர்த்திருப்பதால் அந்நூற்றாண்டுக்கு முன்னும், எனவே பத்தாவது நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டு மென்பது ஆராய்ச்சி யாளர் துணிபு. ஆகவே இவர் ஆளுடைய பிள்ளையார் காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுக்குப் பின் இருந்தவ ராதலாலும், பெரும்புலவர் பெருமானும், இறைவன் மாட்டும் அடியார் மாட்டும் பேரன்பருமாவ ரென்பது இவரியற்றிய நூலால் விளங்குகின்றமையாலும் இவர் கூற்று வலியுடைய தென்க. இதனை ஒட்டி நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

"மெல்விரலாற் றோட்டியல் காதனிவ னென்று
தாதைக்குச்சூழ் விசும்பிற் காட்டிய கன்று''

எனக் கூறிப்போந்தனர். இவ்விரண்டு ஆதரவுகளைக் கொண்டு சேக்கிழார் பெருமான் விரித்துக் கூறினரென்க.

இரண்டாவ தாகிய பொற்றாளம் பெற்றதற்கு அகச் சான்று இல்லை; எனினும இவருக்கு அடுத்த நூற்றாண்டிலிருந்தவரும், இறைவனாற் றடுத்தாட் கொள்ளப் பட்டவரும், சைவ சமய குரவருள் ஒருவரும், தீதகன் றுலகமுய்யத் திருத்தொண்டத் தொகை யருளிய திருவாளருமாகிய திருநாவலூரர் பெருமான்,

" நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பும்
ஞானசம் பந்தனுக் குலகவர்முன்

*தாளமீந்தவன் பாடலுக் கிரங்குந்*
*தன்மை யாளனை"*

எனக் கூறுவதும், அதுவுந் திருக்கோலக்காப் பதிகத்திற் கூறி யிருப்பதுஞ் சிறந்த சான்றுதல் காண்க. இது தான் சேக்கி ழாருக்கு ஆதரவளித்தது என்க.

மூன்றாவது திருவரத் துறையில் முத்துப்பல்லக்கு முதலி யன பெற்றதாகும். இதற்கு வெளிப்படையான அகச்சான் றில்லை. ஆனால் நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திரு வந்தாதியில் ஏனையோர்களைப் போல் திருஞான சம்பந்தரையுங் கூறியதோடமையாது அவரைப் பற்றி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள் ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்ப கம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என ஆறு நூல் கள் செய்திருக்கின்றனர். சண்பையர் கோன் வரலாற்றுக் குறிப்புகள் முற்றும் அந்நூல்களில் வந்துள்ளமை காண்க.

நான்காவது கொல்லிமழவன் புதல்வியின் நோயைத் தீர்த் தது. இதற்கு வெளிப்படையான அகச்சான்றில்லை யேனும், அதுபோது பாடிய 'துணிவளர்' என்று தொடங்குந் திருப் பாச்சி லாச்சிராமத்துப் பதிகத்தின் பாட்டினிறுதி தோறும் இக்குறிப்பு அமைந்து கிடத்தல் காண்க. அது அகப்பொருட் டுறையிற் பாடியதோ வென ஐயம் விளைப்பினும் ஏழாவது பாட்டின்கண்,

"அங்கிள மங்கையோர் பங்கினர்
பாச்சிலாச் சிராமத் துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல்
வாடச்சதிர் செய்வதோ விவர்சார்வே"

என்பதில் 'அங்கிள மங்கையோர் பங்கினர்' என்ற குறிப்பு அதற்கிடங் கொடாமை காண்க.

ஐந்தாவது திருக்கொடி மாடச் செங்குன்றூரில் அடியார் களுக்கு நேர்ந்த நளிர் சுரத்தை நீக்கியது. இதற்கும் வெளிப்

படையான அகச்சான்றில்லை யேனும், அதுபோழ்து பாடிய 'அவ்வினைக் கிவ்வினை' என்று தொடங்குந் திருநீலகண்டப் பதிகத்துப் பாட்டின் ஈற்றடி முழுதும் இதனைக் குறிப்பாலுணர்த்துதல் காண்க.

ஆறாவது திருப்பட்டீச் சரத்தில் முத்துப் பந்தர் பெற்றது. இதற்கு அகச்சான்று யாதுமில்லை.

ஏழாவது திருவாவடு துறையில் பொன் பெற்றது. இதற்குத் தக்க சான்று உள்ளது; அதாவது அடிகளோடு உடன் காலத்தவராகிய திருநாவுக்கரசர் பெருமான்,

" மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங்கொடுப் பர்போலு மாவடு துறைய னாரே"

என அருளியது.

எட்டாவது பாம்பினு லிறந்த வணிகனை எழுப்பியது. இதற்கு அகச்சான்று கிடையாது. அப்பொழுது பாடியது 'சடையா யெனுமால்' என்று தொடங்குந் திருமருகற் பதிகமென்பர் சேக்கிழார். 'ஆனால் இது அகப் பொருட்டுறையிலமைந்துள்ளதோ' எனும் ஐயம் எழுகின்றது. "அதின் மூன்றாவது பாட்டில் 'அழல்வா யரவும்' என்ற குறிப்பு இதனை உணர்த்தும்" என்பர். அப்பாட்டினிறுதியில் 'இவளை' இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே' என வருந்தொடர் மேற்படி ஐயுறவை வலிபெறச் செய்கிறது. "ஆறாவது பாட்டின் 3-4 அடிகளாகிய,

" புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே"

என்பன வரலாற்றை ஒட்டி யிருப்பதால் விடந்தீர்த்தற் பொருட்டுப் பாடிய தென்பதற்குப் போதிய சான்று எனக் கொள்ளலாகாதோ?" எனின்,

" எழுவாள் நினைவாள் இரவும் பகலும்"

எனுந் தொடரும்,

" அலங்க லிவளை யலராக் கினையே"

என்பதும்,

" நெறியார் குழலி நிறை நீக்கினையே"

என்பதுமாகிய இவற்றுக்கு என் கூறுவது? மேற்கண்ட தொடர்கள் அகப்பொருட்டுறையில் வரும் பல பதிகங்களில் வருதல் காண்க. இஃது நன்கு ஆராய்ந்து முடிவு கட்ட வேண் டுவ தொன்றென்பது எனது கருத்து.

ஒன்பதாவது திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றதாகும். இதற்குச் சான்று மேலே திருநாவுக்கரசரைப் பற்றிக் கூறிய விடத்தே கூறி விட்டோம். அன்றியும் நம்பியாண்டார் நம்பி பாடியனவாக மேலே காட்டப்பட்ட ஆறு நூல்களிலுங் காண்க.

பத்தாவதாகிய திருமறைக் காட்டுத் திருக்கதவம் அடைக் கப் பாடியதற்குச் சான்று அதன் பொருட்டுப் பாடப்பட்ட 'சதுரம் மறை' என்னு முதலையுடைய பாட்டி னீற்றிலுள்ள "கதவந் திருக்காப்புக் கொளுங்கருத்தாலே' என்பதே போதியதாகும். "அது வேண்டிக் கொண்டதாக இருக்கின்ற தேயன்றிக் கதவு அடைத்ததற்குச் சான்று உண்டோ" எனின் அதனைத் திறக்கப் பாடிய திருநாவுக்கரசர் பெருமான்,

"திறக்கப்பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்பப்பாடி யடைப்பித்தா ருண்ணின்றார்"

எனக் கூறுவது தக்க சான்றுதல் காண்க.

பதினொன்றாவது மதுரையிற் சமணர்களை வாதில் வென் றது. இஃது பெரியதொரு விஷயமாகும். திருஞானசம்பந்தர் தோற்றத்தின் நோக்கத்தினை உய்த்துணரின் அஃது அற்றை நாள் சமணர்கள் தங்கள் கொள்கைக்குப் புறம்பாகி மன்னர் களைத் தம்வயமாக்கிக் கொண்டு செய்த கொடுஞ் செயல்களை ஒழித்தற் பொருட்டே இறைவ னாணையால் இந்நிலவுலகிற் போந்தது என்பது நன்கு புலனாகும். சிரபுரச் செம்மல் திருத் துருத்தித் தேவாரமொன்றில்

"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினாய்"

எனக் கூறுவதனால் அவர், முன்னர் ஆண்டவனுடைய திருவடியை மறவாத ஒருவராக இருந்தமையும், அங்ஙனமிருக்கவும் அவ்விறைவன் அவர் இந்நிலவுலகத்திற் பிறத்தற்கேற்ற ஒரு காரணத்தைச் செய்வித்துப் பிறப்பித்தாரென்பதும் விளங்குதல் காண்க. இன்னும் இவர்,

"பாலனாய தொண்டு செய்து பண்டுமின்று முன்னையே"

எனக் கூறுவதாலும் முற்பிறப்பில் தாம் ஆண்டவனருட்கழலை மறவாத ஒரு தொண்டரென்பதைக் குறிப்பிக்கின்றார். 'பாலனாய இன்றும்; பண்டும்' எனக்கொண்டு கூட்டிப் 'பண்டு' என்பதற்கு முற்பிறவி எனப்பொருள் கொள்க. அதற்குக் காரணமாகிய 'மையல்' யாதென விளங்கவில்லை. அஃது நமது ஞான வள்ளலாருக்கு ஒரு தீவினையாகத் தோன்றினமையாற்றான்,

"பண்டு நான்செய்த பாவங்கள் தீர்ப்பார் பாம்பர நன்னக ராரே"

எனவும்,

"பண்டு நான்செய்த வினைகள் பறையவோர் நெறி யருள் பயப்பார்"

எனவுங் கூறியருளினரென்க.

இங்ஙனம் தோன்றியருளிய இவர் மூன்றாவது ஆண்டிலே பாடுங்கால் (இதற்கு ஆதரவு முன்னரே காட்டப்பட்டது) பத்தாவது பாட்டில் சமணர்களைக் குறிப்பதென்றால் அவர் பிறப்பு நோக்கம் நன்கு விளங்குகின்ற தன்றோ? இவ்வாதரவுகளைக் கொண்டே சேக்கிழார் பெருமான் சிவபாத இருதயரும் அவர் மனைவியாராகிய பகவதியாரும் 'சமண் முதலிய சமயத்தார் கொடுமையை ஒழித்துச் சைவ சமயத்தை நிலைநாட்ட வல்ல மகவு ஒன்று வேண்டும்' என அம்மையையும் அப்பனையும் வணங்கி வந்தனர் எனக் கூறியருளியதூஉமென்க. என்னை? தாய் தந்தையரின் நினைவு முதிர்ச்சியே குழந்தைகளின் குணமாயமைதலினென்க.

இனி, வெங்குரு வேந்தர் மதுரையின் கண் பல அடியார்

களுடன் உறங்கப்பெற்ற மடத்தின்கண் சமணர்கள் பாண்டி மன்னன் ஆதரவை வஞ்சகமாகப் பெற்று நெருப்பு வைத்து விட்டனர், அதனை யறிந்த காழிக்கன்று 'அத்தீ, வெப்பு நோயாகி மெல்லச் சென்று பாண்டியனைப் பற்றக்கடவது' எனப் பணித்தனர். இவ்வுண்மையை அப்பிரமபுரப் பெரியார் அருளிச் செய்த

"செய்யனே திரு வாலவாய் மேவிய
ஐயனே யஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

"அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தனுரை பத்துஞ்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே"

என்னுந் தமிழ் மறையால் உணர்க. அரசன் ஆதரவிற் சமணர் கள் தீ வைத்தனராகலின் பெருங்குற்றம் மன்னன் பாலது நோக்கியும், அத்தீங்கின் பயனை அவன் நுகர்தல் தான் பெரி யோருக்கு ஒப்ப முடிந்ததாகு மென்பது நோக்கியும்,

"வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தனுரை பத்தும்"

என ஆளுடைய பிள்ளையா ரருளியது எண்ணி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

இனி, சமணருடன் வாது செய்யப்போவதற்கு ஆலவா யண்ணலிடஞ் சென்று திருவுள்ள மறிந்தன ரென்பதற்குக் 'காட்டுமாவ துரித்து' என்று தொடங்கும் பதிகமும், 'வேத வேள்வியை' என்று தொடங்கும் பதிகமும் சான்றுதல் காண்க. பின் பாண்டியன் வெப்பு நோய் தீரப்பாடி யருளிய 'மந்திரமா வது' என்னும் முதலையுடைய பதிகத் திறுதியிலுள்ள

"ஆற்றடல் விடையேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப்புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்வல்லவர் நல்லவர் தாமே"

என்பது அவன் வெப்பு நோய் நீங்குமாறு அப்பதிகம் பாடப் பெற்ற தென்பதற்குத் தக்க சான்றாதல் காண்க. சமணர்களுடன் வாது செய்ய விடை யுடையானிடம் விடைகொண்டமைக்குக்,

"கூடலாலவாய்க் கோனை விடை கொண்டு
வாடல்மேனி யமணரை வாட்டிட"

என்பது சான்றாதல் காண்க. நெருப்பி லிட்ட ஆளுடைய பிள்ளையாரினோடு அழியாமைக்குத் 'தளிரிள வளரொளி' என்னு முதலையுடைய பதிக முழுதுஞ் சான்றுதருதல் காண்க. வைகையாற்றின்கண் ஏடு எதிரேறியதற்கு,

"அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக் கினும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலைத் தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றென் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே"

என்பதும்,

"ஏடு சென்றணை தருமே டகம்"

என்பதும்,

"பருமதின் மதுரை மன்னவை யெதிரே பதிகம தெழுதிலை யவை
வருநதி யிடை மிசைவரு கரனே" [யெதிரே

என்பதும் போதிய சான்றன்றோ?

இனிச் சமணர்களைக் கழுவிலேற்றியமை பெரிய புராணத்துக்கூறப்படுகின்றது. அதற்கு முன்னரே நம்பியாண்டார் நம்பி தாமியற்றிய நூல்களில் அதனைப் பலவிடங்களிற் கூறியிருக்கின்றனர். பெரிய புராணத்தை நன்கு படித்தார்க்குச் சம்பந்தர் சமணரைக் கழுவிலேற்றவில்லை யென்பது நன்கு தெரியும். அதனைச் செய்தவர் அரசர். அவர் தமது கடமையைச்செய்தார். யாரும் தத்தம் கடமையைச் செய்யுங்கால் எப்பெரியாரும் விலக்கார். இவ்வுண்மைகளைப் பெரிய புராணத்துட் கண்டு தெளிக.

பன்னிரண்டாவது திருக்கொள்ளம் பூதூரில் பதிகத்தா

லோடம் விடுத்தது. இதனை அதுபோழ்து பாடிய 'கொட்டமே கமழும்' என்னும் பதிகம் குறிப்பாலுணர்த்துதல் காண்க.

பதின்மூன்று, திருத்தெளிச் சேரிக்குப் போகும் வழியில் போதி மங்கையில் நிகழ்ந்த செய்தி. இதற்கு அகச்சான்று இல்லை.

பதினான்கு, திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியது. இதற்கு அப்பதிகத் திறுதியில்,

"குரும்பை யாண்பனை யீன்குலை"

என்பது சான்றாதல் காண்க.

பதினைந்தும் பதினாறும் அவ்வப்பதிகங்களின் குறிப்பா லுணரப்படுவனவே யன்றி வேறு வெளிப்படையான அகச சான்றுகள் கிடையா.

## ௧௨. சிலவற்றிற்கு அகச்சான்று இல்லாமை யல்லது கிடையாமைக்குக் காரணம்

சமய குரவர்கள் தங்கள் வரலாற்றி னுண்மையைப் பிற் காலத்தார் செவ்வனே தெரிந்து தங்களைப் போற்ற வேண்டும் என்னும் எண்ணத்துடன் அகச்சான்று கூறினாரில்லை. அங்ஙனங் கருதிக் கூறியிருப்பாராயின் முறைப்பட அஃதிருப்பதுடன் எல்லாவற்றுக்கும் இருக்கும். அவர்கள் அந்நோக்கத்துடன் கூறியிருப்பின் போற்றுதற்கு உரியவருமாகார். என்னை? ஆண்டுத் தற்போத மிருந்திருத்தலினென்க. சிற்சில கூறியிருப் பதும் ஆண்டவன் தம்பொருட்டு எளிவந்து காட்சியளித்துக் காட்டிய பேரருளை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் ஆற்றா மல் கூறியதென வுணர்க. எனவே, இஃது இல்லாமைக்குக் காரணமாயிற்று.

இனி, இவர்கள் பாடிய பதிகத்தொகை திருமுறை கண்ட புராணத்துட் கூறப்பட்டபடி ஒப்புக்கொள்ளுதல் ஆராய்ச்சி யாளர்க்கு இயலாத தொன்றாயினும், இதுபோழ்து வெளி வந் திருப்பதினும் அதிகம் இருந்திருக்க வேண்டுமென்பது ஒருதலை. பல பதிகங்களிற் பாட்டுக் குறைந்தும், அடி முதலியவை

குறைந்து மிருப்பதே இதற்கோர் போதிய சான்றாகும். எனவே, சில பதிகங்கள் அழிந்திருப்பது உண்மையாதலின் அது கிடையாமைக்குக் காரணமாயிற்று.

(கரு) திருஞானசம்பந்தர் காலம்

கி. பி. 625-650 வரை இருந்தவன் திருநாவுக்கரசர் காலத்திற்காட்டிய மகேந்திர வர்மனென்னுங் குணதரன் புதல்வனாகிய நரசிம்ம வர்மனென்பவன்; இவன் காலத்திற்றான் வாதாவி என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சளுக்கிய மன்னனாகிய இரண்டாவது புலிகேசி என்பானோடு பெரும் போர் நிகழ்ந்தது. இப்போரில் நரசிம்மவர்மன் வெற்றி கொண்டான். வாதாவி என்னும் அந்நகரத்தை அழித்து அங்குத்தன் வெற்றி மரத்தை நாட்டி, அதன்மேல் தன் வீரச்செயல்களைக் குறித்து ஒரு கல்வெட்டு வெட்டுவித்தான். அது இது போழ்து அழிந்துவிட்டதெனினும் அதன்மேல் நரசிங்கன் பட்டப் பெயரான 'மகாமல்ல(ன்)' என்பதும், 'க்ஷிதி புஜாம் அக்ரேஸ்வர பல்லவ' (அரசரில் முதல்வனை பல்லவன்) என்பதும், 'ஸ்நம்பம்ஜய' என்பதும், '(நரவ்ஸி)ம்ஹ விஷ்ணு' என்பதுமாகிய இவற்றை இப்பொழுதுங் காணலாம். இது நடந்தது கி. பி. 642-ல். அப்போரின்கண் மேற்படி நரசிம்ம வர்மனுக்குப் படைத் தலைவராக இருந்து வெற்றி பெற்று மேற்படி நகரத்தை அழித்தவர் சிறுத்தொண்டரென்னும் பரஞ்சோதி என்பவர். இதனை,

"மன்ன வர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங் கைவரை யுகைத்துப்
பன்மணியு நிதிக் குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன வெண்ணில கவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"

என்னும் பெரிய புராணச் செய்யுளால் அறிக. எனவே அச்சிறுத்தொண்ட நாயனார் திருஞான சம்பந்தர் காலத்தவரென்பது "பைங்கோட்டு மலர்" என்று தொடங்கும் பதிகத்தில் 'சிறுத்தொண்டன் பணி செய்ய' எனவும், 'வெந்த நீறணி மார்பன் சிறுத்தொண்டனவன் வேண்ட' எனவும் நிகழ் காலத்தாற் கூறும் அவர் தேவாரத்தாலும், அதனை ஒட்டிக்கூறும் பெரிய

புராணம் முதலியவற்றாலும் அறியலாம். எனவே ஆளுடைய பிள்ளையாரின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்ப.

## கச. இவர் காலத்திலிருந்த நாயன்மார்கள்

திருநாவுக்கரசர், நெடுமாற ரென்னும் பாண்டியன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிறுத்தொண்டர், முருகர், திருநீலநக்கர், குங்குலியக்கலயர், அப்பூதி அடிகளென்பார்.

## கரு. இவர் தேவாரத்துக் காணப்படும் நாயன்மார்கள்

சண்டீசர், நமிநந்தி, திருநீலகண்ட யாழ்ப்பாணர், புகழ்த்துணையார், முருகர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கண்ணப்பர் முதலியோர். இவருள் சண்டீசரை 'வந்த மணலால்' என்று தொடங்கும் பாவாலும் இதுபோன்ற பல பாட்டுக்களாலும், நமிநந்தியடிகளைத் 'தாவியவனுடனிருந்து' என்று தொடங்குந் திருப்பாவினாலும், திருநீலகண்ட யாழ்ப்பாணரை 'நாணமுடை வேதியனும்' என்ற முதலையுடைய அருட்பாவினாலும், புகழ்த்துணையாரை 'நிலந்தணீர் ரோடனல்' என்று தொடங்கும் பாவினாலும், முருகரைத் 'தொண்டர் தன்' 'ஈசனேறமர்' என்ற முதற் குறிப்பையுடைய அருட்பாக்களாலும, திருநீல நக்கரைப் 'பொடிதனைப் பூசுமார்பில்' 'மறையினார்மல்கு' என்று தொடங்கும் பாக்களாலும், சிறுத்தொண்டரைப் 'பைங்கோட்டு' என்று தொடங்கும் பதிகத்தாலும், மங்கையர்க் கரசியாரையும் குலச்சிறையாரையும் 'மங்கையர்க்கரசி' என்று தொடங்கும் பதிகத்தாலும், கண்ணப்பரை 'வேயனைய தோளுமை' என்று தொடங்கும் பாட்டாலும் புகழ்ந்திருக்கின்றனர்.

## கசு. பிற நாயன்மார்கள்

கி. பி. 600 முதல் அதாவது மகேந்திர வர்மன் காலத்திலிருந்து தான் செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள் முதலியன உண்டான தென்பது ஆராய்ச்சியாளர் முடிவு. எனவே அதற்கு முற்பட்டே பல நாயன்மார்கள் இருந்திருக்கலாமன்றோ? அவர்

கட்குக் கல்வெட்டு ஆதரவு கிடைத்தலரிது. பிற்பட்டவர்களுக்கும் அனைவருக்குங் கிடைப்ப தென்பதரிதாகும். என்னை? மன்னர்களாயிருந்து பெரும்போர் புரிந்து வெற்றி பெற்றவர்கள் பெயரே கல்வெட்டுகளில் பெரும்பாலுங் காணப்படுதலினென்க.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரமும், இவர்களை யடுத்துத்தோன்றிய திருநாவலூரர் திருத்தொண்டத் தொகையும் பிற தேவாரமும், இவரை யடுத்துத் தோன்றிய திருவிசைப்பா ஆசிரியருட்சிலரும் பட்டினத்தடிகளுங் கூறிய பாக்களும், அவர்களை யடுத்துத்தோன்றிய நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியும் பிற நூல்களும், அவர்களை யடுத்துத்தோன்றி, தோற்றுவாயிற் கூறிய குணங்களனைத்து முடையவராகிய சேக்கிழார் கூற்றும் இவர்கள் கூற்றை ஒட்டி ஆங்காங்குக் காணப்படுங் குறிகளுமாகிய இவற்றை விடச்சரித்திர வுண்மைக்கு வேறு ஆதரவும் வேண்டுமோ? இவற்றுள் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் பெரிய புராணமாகிய இம்மூன்றையும் பொதுவாகவும் மற்றவற்றைச் சிறப்பாகவுங் கொண்டு பார்ப்போம்.

திருநீலகண்டர் உண்மை சிதம்பரத்திலுள்ள 'இளமையாக்கியார் குளம்' முதலிய குறிகளாலும், இயற்பகையார், இளையான்குடி மாறர், மெய்ப்பொருள், விறன்மிண்டர் ஆகிய இவர்களுண்மை பொதுவாலும், அமர்நீதியாருண்மை முன் காட்டப்பட்ட அப்பரடிகளின் அருட்பாவாலும், எறிபத்தரும் ஏனாதியாருமாகிய இவ்விருவருண்மை பொதுவாலும், கண்ணப்பருண்மை, தேவாரம், திருவாசகம், நக்கீரரும் கல்லாட தேவருமியற்றிய திருக்கண்ணப்பர் திருமறம், திருவிசைப்பா, பதினோராந் திருமுறையாகிய இவற்றாலும், குங்குலியக்கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயர், மூர்த்தியார் என்னுமிவர்களுண்மை பொதுவாலும் முருகருண்மை திருஞான சம்பந்தர் திருவாக்காலும் (முன் காட்டப்பட்டது)' உருத்திர பசுபதியாருண்மை பொதுவாலும், திருநாளைப் போவாருண்மை முன் காட்டப்பட்ட நம்பியாரூரர் தேவாரம், திருப்புன்கூரிலுள்ள 'நந்தன் குளம்' முதலியவற்றாலும், திருக்குறிப்புத்

தொண்டருண்மை பொதுவாலும் சண்டேசருண்மை முன் காட்டப்பட்டபடி மூவர் தேவாரத்தாலும் திருவாசகத்தாலுந் திருவிசைப்பாவாலும் திருக்கோயிற் குறிகளாலும், குலச்சிறை யாருண்மை திருஞான சம்பந்தர் தேவாரத்தாலும், பெருமிழலைக் குறும்பருண்மை பொதுவாலும், காரைக்காலம்மையாருண்மை அவரியற்றியருளிய மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதியாலும், அவற்றின் கண்ணுள்ள அகச்சான்றுகளாலும், அப்பூதியடிகளுண்மை முன் காட்டியபடி திருநாவுக்கரசர் தேவாரத்தாலும், திருநீலநக்கருண்மை திரு ஞான சம்பந்தர் தேவாரத்தாலும் (முன் காட்டப்பட்டது), நமிநந்தியடிகளுண்மை முன் காட்டியவாறு வெங்குருவேந்தர், ஆரூரரசு ஆகிய இருவர் தேவாரத்தாலும், ஏயர்கோன் கலிக் காமருண்மை நாவலூர் நம்பியாரின் நற்பாவினாலும் (முன் காட் டப்பட்டது) திருமூலருண்மை அவரியற்றியருளிய திருமந்திரத் தாலும், தண்டியடிகளுண்மை பொதுவாலும், மூர்க்க நாயனா ருண்மை முன் காட்டியவாறு ஆளுடைய நம்பியாரின் அருள் வாக்காலும், சோமாசிமாறருண்மை பொதுவாலும், சாக்கிய ருண்மை முன் காட்டியபடி ஆரூரரும் அப்பருமாகிய இருவர் மொழியாலும், சிறப்புலியாருண்மை பொதுவாலும், சிறுத் தொண்டருண்மை திருஞான சம்பந்தரின் திருவருட்பாவினாலும் (முன் காட்டப்பட்டது) சேரமான் பெருமாளுண்மை அவரியற் றிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா வென்னும் இந்நூல்களாலும், கணநா தரும் கூற்றுவருமாகிய இவ்விருவருண்மை பொதுவாலும், புகழ்ச்சோழருண்மை பொதுவாலும், நரசிங்க முனையரைய ருண்மை நம்பியாரூரர் நற்றமிழாலும் (முன் காட்டப்பட்டது). அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், சத்தி ஆகிய இவர்களுண்மை பொதுவாலும், ஐயடிகள் காடவர்கோனுண்மை அவரியற்றிய க்ஷேத்திரத் திருவெண்பாவாலும், கணம்புல்லருண்மை முன் காட்டியபடி தமிழ் விரகரும் தாண்டகவேந்தருமாகிய இருவர் தேவாரத்தாலும், காரியாருண்மையும், நெடுமாறர், வாயிலார், முனையடுவார், கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையா

ராகிய இவர்களுண்மையும் பொதுவாலும், புகழ்த்துணையாருண்மை மூவர் தேவாரத்தாலும் (முன் காட்டப்பட்டது). கோட்புலியாருண்மை சுந்தரமூர்த்திகளின் தேவாரத்தாலும் (முன் காட்டப்பட்டது). பூசலாருண்மை பொதுவாலும், மங்கையர்க் கரசியாருண்மை சம்பந்தர் தேவாரத்தாலும் (முன் காட்டப்பட்டது). நேசருண்மை பொதுவாலும், கோச்செங்கட் சோழருண்மை மூவர் தேவாரத்தாலும் பல திருக்கோயில்களாலும், திருநீலகண்ட யாழ்ப்பாணருண்மை திருஞான சம்பந்தர் தேவாரத்தாலும், சடையர், இசைஞானியாருண்மை நாவலூரர் தேவாரத்தாலும் நன்கு பெறப்படுதல் காண்க. சிறப்புக் கூறிய எல்லாவற்றோடும் பொதுவையுங் கூட்டிக் கொள்க. அன்றியும் ஒவ்வொரு நாயன்மார்களு மிருந்த ஊரிற்சென்று பார்த்தால் ஆங்காங்கு அவரவர் இருந்தமைக்கு அறிகுறியாகச் சில அடையாளங்கள் இன்னமு மிருப்பது கண்கூடு. எனவே தனியடியார்கள் வரலாற்றுண்மையில் யாதும் ஐயுறவில்லை யென்க.

(சித்தாந்தம்.)

---

# பள்ளி யெழுச்சி

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.,]

பிறரால் பெருஞ் சுட்டு வேண்டும் பெற்றி அவரவர் பணியாற்றுந் திறனையே பொறுத்ததாகும். கைப்பொருளொன்றுண்டானால் அச் சுட்டுதானும் எளிதிற் பெறப்படுவதொன்றன்றோ வெனின் அத்தகையதோர் சுட்டைப் பெறுவதனாலாய பயன் யாதொன்றுமில்லை யாகலின் அது வேண்டப்படுவதின்றாம். எனவே, உண்மை சுட்டு வேண்டின் செயற்கரிய செய்யுந் திறனுடைத்தாதல் இன்றியமையாததாகும் என்பது எளிதிற் பெறப்படும். இத்தகைய அருந்திறல் படைத்தானொருவன் பணியாற்றத் தொடங்குங்கால் காலத்தை வீண்போக்காமல் வேண்டியாங்குச் செவ்வனே பயன் படுத்தி வரும் பண்புடையானாதல் வேண்டும்; காலத்தை வீண் போக்காது சேமித்துப்

பயன்படுத்திக்கொள விழையின் விளக்கொளியிற் பணியாற்று வதைக் குறைத்துப் பகலொளியை முற்றிலும் பயன் படுத்த முயல வேண்டும். அஃதாவது காலத்தானே துயினீத் தெழுந்து, எழுந்தவுடன் மடியின்றிப் பணி தொடங்கி மாலைப் பொழுதிற்குள் அதனை முடிக்க முயல வேண்டும் என்பதே. பயனில் பேச்சுப் பேசிக் காலத்தைக் கொன்னே கழிக்கும் பழக்கத்தின் பாற்பட்டா னொருவனை யதனினின்றும் மீட்டல் எளிதன்று. கற்றூர் கடியுந் தகைத்தாய இக்கொடிய பழக் கத்தி லீடுபட்டார் பெரும்பாலும் அது கருதி இரவின்கண் நெடுநேரம் துயிலொழிந்து கண் விழித்திருக்க நேரிடுவதாற் காலையில் எழுவது அவர்கட்கு இயலாதாகிறது. முதியோர் நிறைதுயிற் பிடியாது குறைதுயிலே கொள்வர். இளைஞர்க்கோ வெனின் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்கி யெழுதலே இயல்பாகும். மாரி காலத்திலோ இன்னுஞ் சற்று நேரம் மிக்குத் தூங்குதலும் ஏற்புடைத்தே. ஒரு மணி நேரந் துயிற் கொள் ளாது கண் விழித்துத் திண்ணையின் மேலுட்கார்ந்து வீண் பேச் சுப் பேசிக் கழிப்பதைவிட ஒவ்வொரு மணி நேரம் படுக்கை யிற் படுத்துறங்குதல் எத்துணையோ சிறந்ததாம். நள்ளிரவின் முன் கொண்ட துயில் அதன்பின் கொண்ட துயிலைவிடப் பன் மடங்கு சிறந்ததென அறிஞர் கூறுவர். ஆகவே, பேசுவான் றொடங்கி என்ன பேசுவது என்று தெரியாத வரையிற் பேசியே காலங் கழித்தலை யொழித்துக் காலத்தானே படுக்கைக்குச் செல்லும் சீரிய ஒழுக்கத்தைக் கைக்கோடல் நேரிதாம்.

இனி, காலத்தானே படுத்துக் காலத்தானே யெழுந்து விடுதலே சால்பெனக் கோடல் பெருந்தவறாகும். காலையி லெழுந்தவுடன் கருத்தாய்ப் பணியாற்ற முற்படாவிடின் எழுந் ததனாலாய பயன் ஏதுமில்லையா யொழியும். காலத்தானே துயி னீத்தா னொருவன் படுக்கையின் மீதே உட்கார்ந்தபடி, ஆடை யுந் திருத்தாமல் மணிக் கணக்காக அடைகாயும் வெள்ளிலை யும் அடைத்தடைத்துத் துப்பி வருவானாயின் எழுந்ததன் பயன் என்னாம்? (அதை விட்டுப் படுத்தே இன்னுஞ் சற்றுத்-

தூங்கி வருவாராயின் அது சிறந்த தொன்றாகாதோ?) பரம்பரைச் செல்வந்தர்கட்கு அது ஒரு வகையில் ஏற்றதுதான். என்னை? விளையும் பொருள்கள் வீண் போகாவாறு அவற்றை உண்டு கழிக்கவே அவர்கள் இவ்வுலகிடைப் பிறந்தவர்களாதலின் ஏனையோர் அவ்வாறிருத்தல் எவ்வாற்றானுந் தகாதாகலின் காலத்தானே எழுந்து காலைக்கடன் முடித்துக் கருமஞ் செயப் புகுதலை அவர்கள் மேற் கொள்ள வேண்டும்.

---

# சிவஞான போதக்கருத்து

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

## இரண்டாவது சூத்திரம்

இரண்டாவது சூத்திரக் கருத்துக் கூறத் தொடங்குமுன் முதலாவது சூத்திரத்துக்கும் இரண்டாவது சூத்திரத்துக்கும் உள்ள இயைபு கூறப்பட வேண்டியதா யிருக்கிறது. இயைபு என்பது ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமுள்ள பொருந்துமுண்மையாகும்.

2. முதலாவது சூத்திரத்தில் உலகமானது அழித்தற் கடவுளிடம் ஒடுங்கி அவனிடமிருந்து மீளத் தோன்றுதலால் அழித்தற் கடவுளே உலகிற்கு முதல்வன் என்று கூறப்பட்டது. ஆனால் அச் சூத்திரத்தில் உலகம் எவ்வாறு அழித்தற் கடவுளிடமிருந்து மீளத் தோன்றுகிறது என்னும் மீளத் தோன்றும் முறைமை கூறப்படவில்லை. உலகம் மீளத் தோன்றும் முறைமையை இரண்டாவது சூத்திரத்தில் ஆசிரியர் கூறுதலால் அவ்வாறு கூறுதல் சூத்திர இயைபு ஆகின்றது. சூத்திர இயைபு பாத இயைபு என்றும் கூறப்படும்.

3. அன்றியும் முதலாவது சூத்திரத்தில் கடவுள் உலகிற்கு நிமித்த காரணம் என்று கூறப்பட்டதே அன்றி அந் நிமித்த காரணத்தின் இனங்களாகிய முதற் காரணம் துணைக் காரணங்கள் கூறப்படவில்லை. அதனால் முதற்காரணம் துணைக்

காரணங்களின்றிக் கடவுள் எவ்வாறு உலகை மீளத்தோற்றுதல் கூடும் என்ற ஐயம் நிகழும். அந்த ஐயம் நீக்குதற்பொருட்டு எழுந்தது இரண்டாவது சூத்திரம் ஆதலின் அதனாலும் சூத்திர இயைபு பெறப்படுகின்றது.

4. முதலாவது சூத்திரத்தில் நிமித்த காரணமும் இரண்டாவது சூத்திரத்தில் முதற்காரண துணைக்காரணங்களும் கூறப்படுதலால் இச் சூத்திரங்களின் கருத்து விளக்கத்துக்கும் பின்வரும் சூத்திரங்களின் கருத்து விளக்கத்துக்கும் காரண காரிய நிகழ்ச்சி முறைமை ஆராய்ச்சி இன்றி அமையாததாயிருக்கின்றது. ஆதலின் காரண காரிய நிகழ்ச்சி முறைமையானது இங்கே இப்பொழுது சிறிது விரித்துக் கூறப்படும்.

5. காரண காரிய நிகழ்ச்சி முறைமை என்பது என்ன? காரணமானது காரியத்திற்கு இன்றி அமையாததாய்க் காரியத்துடன் தொடர்பு உடையதாய் எப்பொழுதும் காரியத்துக்கு முன்னே நிகழ்வது. காரியமானது காரணத்துடன் தொடர்புடையதாய் எப்பொழுதும் காரணத்துக்குப் பின்னே நிகழ்வது. காரணமின்றிக் காரியமில்லை; காரியமின்றிக் காரணமில்லை. காரணமாகிய நல்வித்திலிருந்து நிலம் குளிர்ந்த பொழுது காரியமாகிய முளை உண்டாகவே செய்யும்; முளையாகிய காரியம் வித்து ஆகிய காரணத்தையின்றி உண்டாகாது. ஆகவே காரண காரிய நிகழ்ச்சி முறைமை என்பது காரண முன் வழிக்காரியம் பின்னே தோன்றும் என்னும் இயற்கைச் சட்டம் ஆகும்.

6. இந்தக் காரண காரிய நிகழ்ச்சியானது காலத்தையும் இடத்தையும் பற்றி நிகழும். காலமில்லாத பொழுது காரணத்துக்கு முற்பாடும் காரியத்துக்குப் பிற்பாடும் உண்டாகா. முற்பாட்டுக்கும் பிற்பாட்டுக்கும் கால இடை சிறிய அளவாயிருக்கலாம்; அல்லது பெரிய அளவு உடையதாயிருக்கலாம். இடமில்லாத பொழுது காரண காரியங்களுக்குப் பற்றுக்கோடு (ஆதாரம்) உளவாகாது. காலக் கருத்துக்கும் (idea of time) இடக்கருத்துக்கும் (idea of space) நெருங்கிய தொடர்பு உளது. தோன்றியுள்ள உலகம் (manifested world) காலத்தாலும்

இடத்தாலுமே அளவு படுத்தப்படுகின்றது. எத்தொழில் நிகழ்ந்தாலும் அது எப்பொழுது நிகழ்ந்தது எந்த இடத்தில் நிகழ்ந்தது என்ற கருத்துக்கள் அத்தொழிலுடன் தொடர்பு உள்ளதாயிருக்கின்றன.

7. காரண காரியம் இரண்டும் நாம் கண்ணாற் காணுகிற பருப்பொருள்களா யிருக்கலாம்; அல்லது காரணம் கண்ணுக்குத் தெரிகிற பருப்பொருளா யிருக்கலாம்; அல்லது காரண காரியங்களிரண்டும் கண்ணுக்குத் தெரியாத நுண்பொருள்களா யிருக்கலாம். ஆனால் காரணப்பொருள் காரியப் பொருளைப் பார்க்கிலும் எப்பொழுதும் நுண்பொருளாகவே யிருக்கும். காரண காரியங்களிரண்டும் பருப்பொருள்களா யிருந்து அவைகளிடத்தில் நாம் காணும் பழக்க அறிவினால் கண்ணுக்குத் தெரிகிற பொருளாகிய காரியத்தைக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத ஒரு காரணப்பொருள் உளது என்று நாம் கருதி (அனுமானித்து) அறிகிறோம். எடுத்துக் காட்டாகக் குடம் ஆகிய காரியப்பொருளை மண் ஆகிய காரணப் பொருளிலிருந்து உண்டானதாக நாம் கண்ணாற் கண்டு பழகி வந்த பழக்க அறிவினால் கண்ணாற் காணப்பட்ட உலகத்தைக் கொண்டு, அதற்கு ஒரு நிமித்த காரணமாகக் கடவுள் உண்டு என்று நாம் கருதி அறிகிறோம்.

8. இனிக் காரணவகைகளைக் கருதுவாம். ஒரு காரியம் உண்டானதற்கு நிமித்த காரணம் முதற்காரணம், துணைக் காரணங்கள் என மூன்று காரணங்களும் வேண்டப்படுவன. இவற்றுள் ஒன்று இல்லாதிருந்தாலும் காரியம்நிகழாது. நிமித்த காரணம் அறிவுடைய பொருளாகவே யிருக்கும்; முற்றறிவுடைய கடவுளாயிருக்கலாம், அல்லது சிற்றறிவுடைய உயிராயிருக்கலாம். முதற் காரணம் துணைக்காரணங்கள் உயிர்ப்பொருளாயிருக்கலாம், அல்லது உயிரில் பொருளாயிருக்கலாம். முதற் காரணப் பொருள் எப்பொழுதும் காரியப் பொருளுடன் ஒற்றுமை யுடையதாய் அதனை விட்டு நீங்காமலிருக்கும். துணைக் காரணப் பொருளானது முதற்காரணப் பொருள் காரியப்

பொருளாகும் வரை துணையாக உடனிருந்து பின் நீங்குவதா யுள்ளது.

9. மூன்று காரணங்களையும் காரியத்தையும் எவ்வாறு அறிதல் வேண்டும் என்பது. ஒருவன் ஒரு தொழிலைச் செய்து அத்தொழிலால் முடிவு பெற்ற பொருளே காரியம் ஆகும். இந்தக் காரியப்பொருளே அவனாற் செய்யப்பட்ட பொருளாகும். இந்தச் செய்யப்படு பொருளைச் செய்த அறிவுடைப்பொருள் நிமித்த காரணம் ஆகும். அது அப்பொருளை யார் செய்தார்? என்னும் கேள்விக்கு விடையாய்ப் பெறப்படுவது. செயப்படு பொருள் எந்தப் பொருளிலே செய்யப்படுகிறதோ அது முதற் காரணம். அது செயப்படு பொருளானது எப்பொருளிலே செய்யப்பட்டது என்னும் கேள்விக்கு விடையாய்ப் பெறப்படுவது. செயப்படுபொருள் செய்தற்குக் கருவியாயுள்ளது துணைக்காரணம். அது செயப்படுபொருள் எந்தக் கருவியாலே செய்யப்பட்டது என்னும் கேள்விக்கு விடையாய்ப் பெறப்படுவது. எடுத்துக்காட்டாக வனைதலாகிய தொழிலால் முடிவு பெற்ற செய்யப்படுபொருள் குடம். குடமே காரியப் பொருள் ஆகும். அக்குடம் மண்ணிலே செய்யப்பட்டது. ஆதலின் மண்முதற் காரணம் ஆகும். மண் குடத்தைவிட்டு எப்பொழுதும் நீங்காதிருப்பது. அது தண்டசக்கரக் கருவியால் செய்யப்பட்டதாதலின் தண்ட சக்கரம் துணைக்காரணம் ஆகும். இந்த எடுத்துக்காட்டு உவமையில் உவமேயப் பொருள்களை நோக்கில் உலகம் செய்யப்படு பொருளாகிய காரியமும் கடவுள் நிமித்த காரணமும் மாயை முதற் காரணமும் கடவுளுடைய அருள் வலி துணைக்காரணமும் ஆகின்றன. ஆகவே நிமித்த காரணமாகிய குயவன் முதற் காரணமாகியமண்ணிலே துணைக்காரணமாகிய தண்டசக்கரத்தால் வனைதலாகிய தொழிலைச்செய்து முடித்து, குடமாகிய காரியத்தை உண்டு பண்ணுதல் போல, நிமித்த காரணமாகிய கடவுள் முதற் காரணமாகிய மாயையில் அருள் வலியாகிய துணைக்காரணத்தால் படைத்தலாகிய தொழிலைச் செய்து உலகமாகிய காரியத்தைப் படைக்கின்றான். இரண்

டாவது சூத்திரத்திற் கூறப்படுகிற துணைக்காரணம் உயிர்களுடைய கட்டு நிலையில் வழங்கப்படுகின்ற கடவுளுடைய மறைப்பு வலி (திரோதானசத்தி)யாகும். இவ்வாறு மாயையிலிருந்து உண்டாகிற உலகமானது மாயைக்கு ஆதாரமாய்க் கடவுளிருத்தலினால், கடவுளிடமிருந்து உண்டாகிறது என்றும் கூறப்படுகிறது.

10. ஏதாவதொரு தொழிலினால் ஒரு காரணப் பொருள் காரியப் பொருள் ஆகின்றது என்று நாம் மேலே கண்டோம். தொழில் செய்தற்கு அறிவு வேண்டப்படும். ஒருவன் ஒரு தொழிலை எப்படிச்செய்கிறது, என்னும் அறிவு இல்லாமல் அதனைச் செய்து காரியப் பொருளையுண்டு பண்ணுதல் முடியாது. ஒரு தொழிலைச் செய்யும் அறிவு இருந்தாலும் அதனைச் செய்யும் வேட்கைஇருந்தால் அன்றி அதனைச் செய்யத்தொடங்க மாட்டான். தொழிலானது செயலால் நிகழ்கின்றது. ஆகவே ஒரு நிமித்த காரணமாகிய வினைமுதல் ஒரு காரியப்பொருளை உண்டுபண்ண வேட்கை அறிவு செயல் மூன்றும் இன்றி அமையாது வேண்டப்படும். இதனால் மண்போல ஒரு முதற் காரணப் பொருள் குடம்போல ஒரு காரியப்பொருளாய் முடிதற்கு, வேட்கை அறிவு செயல்கள் மூன்றும் வேண்டப்படும் என்பது பெறப்பட்டது.

11. காரணகாரிய நிகழ்ச்சி மண்போலுள்ள ஒரு முதற் காரணப் பொருளில் நடைபெறுதல்போல, பறவை விலங்கு மக்கள் முதலிய உயிர்ப் பொருள்களினும் நடைபெறுதலுண்டு. மேற்கு நாட்டு உடல்நூல் வல்லாரும் (Physiologists) உயிர்நூல் வல்லாரும் (Biologists) உள்ளம் நூல் வல்லாரும் (Psychologists) கல்வித்திறன் வல்லாரும் (Educationalists) தங்கள் வேட்கை அறிவு செயல்களின் திறத்தினால் உயிர்களில் சில புதிய அறிவு செயற் பழக்கங்களை உண்டு பண்ணுகின்றார்கள்.

12. மேலே கூறியபடி மக்களுடைய வேட்கை அறிவு செயல்களால் காரணகாரிய நிகழ்ச்சி நடைபெறுதல்போல,

இயற்கையிலும் காரணகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இயற்கையில் அவைகள் நிகழும் பொழுது கடவுள் நிமித்த காரணம் ஆகின்றான். அதனை மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சியாளர்கள் காரண காரியச்சட்டம் (Law of cause and effect or Law of causation) என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் காரண காரியச் சட்டத்தை மக்களுடைய ஒரு பிறப்புக்கே உரியதாகக் கொள்ளுகிறார்கள். நமது நாட்டு முற்கால அறிஞர்கள் ஒரு உயிருக்குள்ள பல பிறப்பு வாழ்நாள்களையும் சேர்த்து அதனுடைய வாழ்நாளாகக் கொண்டு காரண காரியச் சட்டத்தைப் பல பிறப்புகளுக்கு முள்ள வேட்கை அறிவு செயல்களுக்கு உரியதாக்குகிறார்கள். அதனையே அவர்கள் ஊழ்வினை அல்லது பால் என்று கூறுகிறார்கள். இக்காலத்தில் மேற்குநாட்டு அறிஞர்கள் பலர் வினைச் சட்டததையும் (Law of Karma), பல பிறப்பு உண்மையையும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். உயிர்களுடைய வினையும் உலகம் மீளப்படைத்தலுக்குக் கடவுளுடைய மறைப்பு வலியுடன் (திரோதான சத்தியுடன்) துணைக்காரணமாக இரண்டாவது சூத்திரம் இரண்டாவது அதிகரணத்திற் கூறப்படுகின்றது. வினைச் சட்டமானது (Law of Karma) தாங்கள் பின் அடைய விரும்புகிற மேல் நிலையை அடைதற்கு முயலும் ஊக்கத்தையும் முயற்சியினால் விரும்பிய நிலையை அடைதல் கூடுமென்ற உறுதியையும் கொடுக்கிறது.

13. ஒருவனுக்கு உலகியல் அறிவும் மெய் அறிவும் காரணகாரிய நிகழ்ச்சி முறைமையை அறிதலாலே உண்டாகின்றது. ஒருவன் செய்தொழிற்றிறனும் அதனாலே உண்டாகிறது. ஒரு மருத்துவனுக்கு நோய்தீர் திறனும் ஒரு வழக்கறிஞனுக்கு (Vakil) மன்றத்தில் வழக்குப் பேசுந்திறனும் ஒரு மன்றத் தலைவனுக்கு (Judge) வழக்கு முடிவு செய்யுந் திறனும் காரணகாரிய நிகழ்ச்சி முறைமை அறிவினாலே உண்டாகின்றன. இதனால் காரணகாரிய நிகழ்ச்சி முறைமை அறிவானது எத்துணை மேம்பாடு உடையது என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

14. சைவ சித்தாந்தத்தில் சிறப்பாக எடுத்துக் கூறப் படுகிற உள்ளது தோன்றல் முறைமை (சற்காரிய வாதம்) என்னும் உண்மையானது மேலே கூறிய காரணகாரிய நிகழ்ச்சி முறைமையைச் சார்ந்துள்ளது. காரண நிலையில் சத்திக் கூட்டமாய் அடங்கியுள்ள ஒரு சிறிய நுண் பொருள் செய் தொழிற் பாட்டினால் காரிய நிலையில் பருப்பொருளாய் வெளிப் படுதலே, உள்ளது தோன்றல் முறைமை (சற்காரிய வாதம்) ஆகும். அது ஒரு சிறிய ஆலம் விதையிலிருந்து ஒரு பெரிய ஆலமரம் உண்டாதலும், ஒரு பூ அரும்பி லடங்கி யுள்ள மணம் அது விரிந்த பொழுது வெளிப்படுத லும் போல்வன. உள்ளது தோன்றும் என்னும் உடன் பாட்டு முறைமைக்கு எதிரிடையாகக் கூறப்படும் இல்லது தோன்றாது என்னும் எதிர் மறை முறைமையும் 'உள்ளது தோன்றன் முறைமை' (சற்காரிய வாதம்)யில் அடங்கும். ஒருக்கால் நுண் உருவில் அடங்கியுள்ள சத்திக் கூட்டப் பொருளே மற்றொருக் கால் பருப்பொருளாய்த் தோன்றி விரிதலாலும், ஒருக்கால் பருப் பொருளாயுள்ளது சத்திக்கூட்ட நுண் பொருளாய் ஒடுங்குதலா லும், மாயாகாரிய உருவங்கள் வளர்ச்சியை (growth) அடை கின்றன. மாயா காரிய உருவங்களை உடலாகக் கொண்ட உயிர் களும் அறிவு வேட்கை செயல்களில் வளர்ச்சி அடைகின்றன. உருவங்களின் வளர்ச்சியும் உயிர்களின் வளர்ச்சியும் ஒன்றுக் கொன்று பொருத்தமாய் நிகழ்கின்றன. (Darwin) டார்வின், (Spencer) ஸ்பென்சர் முதலிய மேற்கு நாட்டு ஆராய்ச்சியாளர் கள் (evolutionists) உருவத்துக்கு மாத்திரமே வளர்ச்சி கூறு கிறார்கள். சைவசித்தாந்தமானது உருவம் உயிர் இரண்டுக் கும் (form & life) வளர்ச்சிகூறி, அவ்வளர்ச்சியினாலே உயிர் உண்மை அறிவு அடைந்து வீடு அடைகின்றது எனக் கூறுகின் றது. இவ்வாறு, உயிர் வீடு அடைதலுக்குக் காரணமாயிருப் பது உள்ளது தோன்றன் முறைமையாகும். உயிர்கள் உலகிலே பிறத்தலினாலே அடங்கி யுள்ளது விரிந்தும் இறத்தலினாலே விரிந் துள்ளது ஒடுங்கியும் வருதலினாலே, அறிவு வேட்கை செயல் களில் பெருக்கம் (development) அடைகின்றன. பிறப்

பினாலே உயிர்களுக்கு ஆணவமலம் பரிபாகம் அடைகின்றது. இறத்தலினாலே வினைமலம் பரிபாகம் அடைகின்றது. உயிர்கள் பிறத்தல் இறத்தல்களை அடையும் தன்மை இச்சூத்திரம் மூன்றாவது அதிகரணத்திற் கூறப்படுகின்றது. இயற்கையில் காணப்படுகின்ற இத்தகைய சிறப்புடைய உள்ளது தோன்றல் முறைமையானது சைவ சமயத்தில் கூறப்படுதல் போல வேறு சமயங்களில் கூறப்படுதலில்லை.

---

# பெண்மக்களும் உடற்பயிற்சியும்

[திரு. ஆவி. சித: சொக்கலிங்கன் அவர்கள்]

இப்பூவுலகிலுற்பவித்த மக்களனைவரும் உடல் வலிமையை விரும்புவார்கள். அதை யடையப் பல வழிகள் இருக்கின்றன, ஆனால், பலர் ஆடவர்களுக்கு மட்டுமே உடல் வலிமை வேண்டும், பெண்களுக்கு வலிமை எற்றுக்கு ? அவர்கள் போருக்கா போகின்றார்கள் என்கிறார்கள். பலர் "அடுப்பூதும் மங்கையர்க்குப்பயிற்சி எற்றுக்குப்படிப்பெற்றுக் கென்கிறார்கள்" சிலர் "பெண்கள் கற்றால் கற்பு நிலை பிறழ்ந்து கணவற்கடங்கார்" என்கிறார்கள். ஆடவர்கள் மட்டும் பயிற்சி பெற்று அவர்கள் மனைவிமார்களுக்கேற்க நடக்கின்றார்களா? என்றால், இல்லை. எனவே, பெண்களுக்குத் தனித்த முறையில் பயிற்சி வேண்டும். வீட்டு வேலைகள் மட்டும் போதுமானதா வென்றால், நாடு இருக்கும் நிலையில் போதியதல்ல. இக்காலத்துப் பெண்கள், ஓர் வேலையுஞ் செய்யாது, கண்டபடி உண்டு, தொப்பையுந் தொந்தியுமாய் உடல் நலங்குன்றப்பெற்று, சாறிழந்த சக்கையாய், என்புக்கூடுகளாய் விளங்குகின்றார்கள். நிற்க, ஓர் வேலையுஞ்செய்யாது, எவ்வேலைக்கும் வேலையாட்களைத் தேடுகின்றார்கள். எனவே, இன்னுங் கொஞ்ச காலத்தில் வேறு வேலைகளுக்குங் (உண்பதற்கும்) கூட ஆள் வைத்து விடுவார்களோ வென்றஞ்சுகின்றேன். உடற்பயிற்சியில்லாத உடலானது, தடித்துக் கொழுத்துத் தளர்வடைகின்றது. தடித்திருப்பது, அழகில்லா

மனும் விகாரமாகவுந் தோன்றும். நிற்க, ஒவ்வொரு முறையும் குனியவும் நிமிரவும் முடியாமல், ஒரு மாப்பையை இடுப்பில் கட்டியிருப்பதைப் போல ஓர் உணர்ச்சி தோன்றும். தடித்திருப்பது சோம்பலைப் பெற்றிருப்பதே. கொழுத்த மனிதன் விரைவில் சாவினையடைகின்றான். எவ்வாறெனின், மூச்சுவிட முடியாமல், திணறித்திணறி மூச்சு விடுவதாலும், இரத்தமானது நின்று நின்று ஓடுவதாலும் மூச்சுப்பைகளும், அதிகமான இழுப்புகளை இழுக்க வேண்டியதிருக்கிறது. இதனால், இரத்தவோட்டக் குறைவு ஏற்பட்டு, விரைவில் சாவடைகின்றார்களென்று ஓர் அறிஞர் கூறுகின்றார். அதிகமாக உண்டு உடற்பயிற்சி செய்யாமலிருப்பதே, இக்குலைவிற்குக் காரணம். தடித்த உடம்பு பயிற்சி பெற்றாலன்றி வலிமை பெறாது. ஒரு வேலையுஞ் செய்யாத இயந்திரமானது, எவ்வாறு துருப்பிடித்துப் போகின்றதோ, அவ்வாறே ஒரு வேலையுஞ் செய்யாத நமது உடலானது மிகுதியாகப் பருத்துத் தொப்பையுந் தொந்தியும் விழுந்து, அருவருப்பான கோலமாய்த் தோன்றும். ஆனால், இயந்திரங்கள் அதிகமான வேலைகளைச் செய்தால் தேய்ந்து போகின்றன. நமது உடலோவெனின், அவ்வாறில்லை. வேலை செய்யச் செய்ய வலிமை பெறுகின்றன. சிலர் இம்முறைகள் நூதனமாக விருந்தாலும், பெண்களுக்குப் பயிற்சி யவசியமில்லை, ஆண்களுக்கு வேண்டியது தானென்கிறார்கள். இவர்கள் கூறுவது அறியாமையே. உலகில், புல் முதல் மக்கள் ஈறாகவுள்ள எல்லாம் ஆண்பெண் வடிவமாகப் பொலிதல் காண்கின்றோம். நிற்க, ஆண்டவன் ஒரு கூறு பெண்ணாகவிளங்குகின்றான். ஆண்டவனின் ஒரு கூறாகிய ஆண்கள் மட்டும் பயிற்சிபெற்றால் போதுமா? மற்றொரு கூறாகிய பெண்கள் இவர்களைப்போல், கால், கை, கண், மூக்கு இவைகளைப் பெற்றிருக்கவில்லையா? "ஓர் குழந்தையின் ஒழுக்கம் அதன் தாயினதையேபற்றி நிற்கும்" என்று, நெப்போலியன் கூறுகின்றார், எனவே பெண்கள் உலகோம்புந் தாயாக விருப்பதால், அவர்களுக்கே, முதலில் உடற்பயிற்சியும் அறிவுப் பயிற்சியும் வேண்டும். "மக்கடாமே ஆறறிவுயிரே" என்று தொல்காப்பியனார்,

பொதுவாகக் கூறியிருக்கின்றார். நிற்க, ஆண்கள் மட்டும் இரு வகைப் பயிற்சியும் பெற்று, பெண்கள் பயிற்சி பெறாதவர்களாக விருந்தால், இவர்களுடைய வாழ்க்கை, எவ்வாறு ஒழுங்காக நடக்கும். ஓர் மருத்துவ வல்லுநர் உடல் நல்வழிகளைப்பற்றிப் பலவாறு படித்தும் பிறர்க் கெடுத்துரைத்தும் பயனென்! அவர்தமில்லாள் அவர் முறைகளைச் சிறிதேனும் பின் பற்றாளாய்த் தன் முறைப்படி புளிப்பையும் காரப்பையும் நனிமிகப் பெய்திட்ட அடிசிலைத்தானே யுண்ணக் கடமைப்பட்டுள்ளார்! அவர் கூறும் வழிகள் அவர் தங்கல்லா மனைவிக்குப் பெரு நகைப்பையேயன்றிப் பிறிதொரு பலனையும் பயக்காவென்க எனவே, இருபாலாரும் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பது நன்கு விளங்குகின்ற தன்றோ? கணவனும் மனைவியும் ஒருங்கே உடற்பயிற்சி செய்துவரின் உடல் வலிமை, அழகு, நீண்ட வாழ் நாள், இவைகளைப் பெற்று வீரக்குழந்தைகளைத் தோற்றுவிப் பார்கள். உடற்பயிற்சி உடலை உள்ளூறக் கழுவி, உடலை வளம் பெறச்செய்கின்றது. இன்று அமெரிக்கா நாட்டில், ஆயிரக் கணக்கான பெண்கள் உடற்பயிற்சியைக் கையாளுகின்றார்கள். எனவே, நாட்டிற்குத் தாயாகிய பெண்கள் முறையே உடற் பயிற்சி செய்துவரின், அவர்களுடைய பிள்ளைகளுக்கு இளமையி லேயே இம்முறைகளை உணர்த்தி நாட்டைப் பண்படுத்துவார் களென்பதற்கு ஐயமில்லை.

---

## கருமை

(௩௯௰-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்பொருளு மதற்கெதிர்ப் பொருளும் பொருந்துவதால், அவை யிரண்டிற்கும் வேறாய புதியவை பல தோன்றும் மின் சாரத்தில் வாங்கு மாற்றல், பாயுமாற்றல் என விருவகையுண்டு. 'பாயு மாற்றல்' என்பது உள்பொருள்; 'வாங்கு மாற்றல்' என் பது அதற்கு எதிராயது. ஆங்கிலத்தில் பாயுமாற்றலை positive என்றும், வாங்கு மாற்றலை negative என்றுங் கூறுகின்றனர்.

இவ்விரண்டாற்றல்களுங் கூடுவதாலேயே, மின்சாரத்தாலிக் காலத்தியற்றப்படும், மிக வியக்கத்தக்க செய்திகள் நிகழ்கின்றன. இவ்வாற்றல்கள் தனித்தனியே யிருந்திடின் ஒரு செய்தியும் நிகழாது! இவை கூடுவதால் நகரங்களை ஒளிபெறச் செய்யும் நல்ல வெளிச்சமும், மக்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் கெளிதிற் கொண்டு செல்லும வண்டிகளை இயக்குஞ் சக்தியுமுண்டாகின்றன. பாயுமாற்றல் செல்கின்ற மின் சாரக்கம்பியின்மேல் சிவப்புநூல் சுற்றுவது வழக்கம். வாங்கு மாற்றல் செல்கின்ற கம்பி கருப்புநூலால் மூடப்படும். பாயுமாற்றல் செல்கின்ற கம்பியைத் தொடுவதால் தீங்கு நேருமென்பதைக் காட்டுதற் பொருட்டுச் சிவப்புநூலை யோரறிகுறியாக வழங்குகின்றனர்போலும். வாங்குஞ் சக்தியோடுங் கம்பியைக் காட்டக் கருப்பைக் குறியாகக் கொண்டது ¡வியக்கத்தக்கதே. கருமையைப்பற்றிய கட்டுரை இஃதாகலின், இதைக் கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

வையகத்திலுள்ள வுயிர்களும் பொருட்களும் வெவ்வேறு தன்மை யுடையனவா யமைந்திருக்கின்றன. இத்தன்மைகளால் உயிர்களும் பொருட்களும் பாயுமியல்புடையனவாகவும், வாங்கு மியல் புடையனவாகவும் பிரிந்திருக்கின்றன. வன்மை, வெப்பம், உரம், தாக்குத் தன்மை கொண்டனவெல்லாம் பாயுமியல்பினவாம். மென்மையுந் தட்பமுந்தாங்கி, அடங்கி யிருப்பனவெல்லாம் வாங்குமியல்பினவாம். ஒளியும் வெப்பமுமொன்றை யொன்றுபற்றி நிற்பவையாம். அன்றியும், ஒரு நொடிப் பொழுதில் எண்ணுதற்கரிய தூரம் விரைந்து செல்லு மாற்றல் ஒளிக்குண்டு. இதனால், ஒளியைப் பாயுமியல்பின தென்று கூறுவதொக்கும். ஒளி பாயுமியல்பினதாயின், இருள் வாங்குமியல்பினதென்பது சொல்லாமலே பெறப்படும். ஒளியு மிருளுங் கூடுவதாற் கண்ணிற்கினிய பன்னிறங்கள் தோன்றுகின்றன. இருளு மொளியுங் கூடு நேரங்கள் காலையுமாலையுமாம். இவ்விரு நேரங்களிலும் விநாடிக்கு விநாடி விசும்பில் வெவ்வேறு நிறங்கள் மிளிர்கின்றன. ஒளிக்கு முதலாகிய கதிரவன், இவ்விரு வேளைகளிலுஞ் சிவந்து தோன்றுகின்றான்.

ஒளியாகிய செம்மை, தனக்கெதிராகிய இருள், அல்லது, கருமையுடன் மயங்குகின்ற காலம் உற்று நோக்கத்தக்கது. கதிரவன் முளைத்தெழு முன்னும், பழுத்து விழுமுன்னும், நாம் விசும்பை நோக்கி, ஆண்டுத்தோன்று மியற்கை யழகுகளை நுகர்தல் கூடும். மற்ற நேரங்களிலவன் கண்ணெடுத்துப் பார்க்க வொட்டாது காய்கின்றான். இந்தியாவிற்கு வருகிற மேனாட்டார், ஈண்டுத தாங்கள் பார்க்கும் காலைக்கதிரவனழகையும், மாலை விண்வனப்பையு மிகப் புகழ்ந்து கொண்டாடுகின்றனர். முகில் மூடிக்கிடக்கின்ற மேனாட்டு விசும்பிலித்தகைய வழகு காண்ட லரிதென்றவர்கள் கூறுகின்றனர். இயற்கை யழகா லீர்க்கப்பட்டவுள்ளம், வணக்கத்திற்கேற்ற நிலையை எளிதி லடைகின்றது. இது கொண்டு, கருமையுஞ் செம்மையுமாகிய விருளுமொளியுங் கூடுங்காலை மாலை வேளைகளை வணக்கத்திற் கேற்ற நேரமாகக் கடவுட்கொள்கையை யுடைய வெல்லோருங் கொண்டனர். இருள் சுருங்கி யொளி பெருகும் காலையிலும் ஒளி யொடுங்கியிருள் மிகுமாலையிலும், மன்பதையின் சிற்றெண்ணங்கள், பொறாமைகள், சீற்றங்கள், முதலியன தணிந்து, உலகிற் கப்பாலுளஞ் செல்ல விடமுண்டாகின்றது. உலகின் ஆரவார மடங்கி, மலைமுடிகளிற்படுகின்ற ஞாயிற்றினொளி நீங்கி, மாலைப்பொழுதின் மங்கிய வெளிச்சம் படிப்படியாக இருளாக மாறி, அன்றாடக வேலையாகிய கூண்டிலடைபட்ட மக்களது மனஞ்சிறிது விடுதலை பெற்று ஓய்ந்திருக்கும் நேரம் வணக்கத் திற்கிசைந்த தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தொன்னாளிலே, மக்கள் குறிஞ்சியினு முல்லையினு முறைந்த போது, மாலையின் வரவை நோக்கியவர்களஞ்சியிருப்பார்க ளென்று நினைக்க விடமுண்டு. மலைச்சாரல்களிலுங் காடுகளிலும் வாழ்ந்தோர், பொழுது போமுன் வீடுபோய்ச் சேரவிரைந்திருப்பர். கல்லு முள்ளு நிறைந்த ஒற்றையடிப் பாதைகளில் நடந்து, இருளில் வழியிழந்து தவிக்குமின்னலை யெண்ணினுமவர்கள் நடுங்கியிருப்பர். பாறையும் பள்ளமுந் தெரியாமல் நடந்து விழுந்து, கொடிய நச்சுப்பூச்சிகளுங் கடுவுடைய உயிர் வகைகளுந்திரியு மிடங்களைக் கடந்து, பதுங்கிப் பாய்கின்ற வல்

விலங்குகள் அழல் விழிகளுடனுறறுமுவதைக்கேட்டு, அவர்கள் மெய் விதிர்ப்படைந்திருப்பர் ஆதலின், ஆடு மாடுகளைப் பொழுது போமுன் பட்டிகளிலடைத்துத் தம்மில்ல மேகி, மனைவி மக்களுடனமர்ந்து, மறுநாட் கதிரவனின் வருகையை யவர்களாவலுடன் எதிர் நோக்கியிருப்பர். இருக்கு வேதத்தை ஆங்கிலப்படுத்திய Max Muller எனும் ஆசிரியர் கூறுமாறு, மறுநாளிற் பகலவன் வருவானோ, இல்லையோ? என்ற ஐயமும் பண்டைக்காலத்து மக்களுக் குண்டாகியிருக்கலாம். இத்தகைய நிலையிலிரவுப் பொழுதைக் கழித்த மக்கள், குருவிகளினின்னிசையுடன் ஞாயிறு கிழக்கிலெழுவதைக் கண்டடைந்த வியப்பையு மின்பத்தையும, ஒன்றோடொன்று நெருக்கிக்கட்டப்பட்ட வீடுகளிருபுறமு மமைந்த வீதிகளில், உள்ளும் புறமும் நல்ல வெளிச்சத்துடன் வாழு நமைப்போன்றவர் எங்ஙனமறிதல் கூடும்? கருமையின் அஞ்சத்தகும் பெற்றியை இவ்வகையிலொரு வாறு நாமறிகின்றோம் பழைய நாள் மாந்தர், நன்றி பெருகி வழிகின்ற நெஞ்சுடன் காலை ஞாயிற்றை வாழ்த்தி வணங்கியிருப்பர். மாலையிலுமவர்கள் கதிரவனைத் தொழுது, மறுநாள் வந்து தங்களை மகிழ்விக்க வேண்டுமென்று மன்றாடியிருப்பா. சந்தியா வந்தன மென்ற வணக்க முறையின் தோற்ற மிதுவே யென்று சிலர் கருதுகின்றனர். இஃதெங்ஙனமாயினும், முற்காலத்து மைந்தர் காலையிலு மாலையிலு முறையே ஒளியையு மிருளையும் பற்றி நினைத்த நினைவுகளிலிருந்து கதைகள் பல தோன்றின வென்பது திண்ணம் அரக்கரையுந் தேவரையுங் குறித்தெழுந்த கதைகள் பல இந்த நினைவுகளை யொட்டியவையே.

ஆனல், ஞாயிற்றினொளிபட்ட பின்னரே, பகுதி பகுதியாய் வானிற் றோன்றி, சொல்லரிய மாண்புடனும், எண்ணரிய முறையுடனு மின்னிப் பெயர்ந்து செல்லும் விண்மீன்களுங் கோள்களும் வெளிப்படுகின்றன வென்பதை முன்னோர் கண்டு, இரவுப் பொழுதின் விந்தையைப் பற்றி யாழ்ந்து கருதி யிருப்பர். பகலிற் றோன்றாத வேறொரு வகையான வெளிச்சமு மாட்சியு மிரவிலுண்டாவதை யவர்களுன்னி, அகன்ற விவ்வையகத்தை யாக்கிய

முதல்வனில் இருளுமொளியு மொன்று மென்று நினைத்தனர் போலும். குறிஞ்சியினு முல்லையினு முறைந்த நாளில் இரவின் வரவு கண்டஞ்சியவர், மருதத்திலு நெய்தலிலு மரண் பெறு வமைக்கப் பெற்ற நகரங்களிலும் பட்டினங்களிலும் வாழப் புகுந்தபின், மாலையிளந் திங்களினழகையும், விண் மீன்கள் கண் சிமிட்டி யொளி காலுஞ் சிறப்பையும், கதிரவ னொடுங்கிய பின் தோன்று மினிய தட்பத்தையு மமைதியையு முணர்ந்து இருளி னச்சந்தவிர்ந்தவராய்க் கருமையினு மொரு கடவுட் டன்மை யுண்டென்று கண்டனர்.

இருளு மொளியு முறையே வாங்கு மாற்றலும் பாயு மாற் றலு முடையவை யென்று முன் கண்டோம். இவை மக்கள் வாழ்க்கையி லெங்ஙனம் பொருந்துகின்றன வென்பதைச் சற் றுக் கருதுவாம். மக்களது வாழ்க்கை இயக்கம், தூக்கம் எனு மிரு கூறாய்ப் பிரிகின்றது. இயக்கமென்பது தொழில் நிகழ் தல்; தூக்கமென்பது தொழிலொடுக்கம். ஆதலின், இயக்க மென்பது பாயு மாற்றலாகின்றது. தூக்கமென்பது வாங்கு வாற்றலாகின்றது. இவ்வாறே ஓசை, அமைதி (Sound and Silence) என்பன பாயு மாற்றலாகவும் வாங்கு மாற்றலாகவும் விளங்குகின்றன. இயக்கமு மொலியு மொரு தன்மையன; தூக்கமு மமைதியு மொரு தன்மையன. ஒலி தூக்கத்தை விலக்கும்; அமைதி இயக்கத்தைக் கெடுக்கும். இயக்கம் நிகழ்வது பகற்பொழுதில். தூக்கம் நிகழ்வது இராப் பொழுதில். ஆதலின் ஒளி, ஒலி, இயக்கம் என்பன தம்மு ளொற்றுமை யுடையன. இருள், அமைதி, தூக்கம் என்பன தம்முளொன்றி நிற்பது சொல்லாமலே பெறப் படும். வன்மையும், வெப்பமு முடையவை பாயு மாற்றல் பெற்றவை யென்றும், மென்மையுந் தட்பமு முடையவை வாங்கு மாற்றல் பெற்றவை யென்று முன்னர் உரைக்கப்பட் டது. வன்மை, எழுச்சி, முயற்சி, இயக்கம் முதலியவை பெரும் பாலும் ஆண் மக்கள் தன்மைகளாகவும்; அமைதி, ஒடுக்கம், மென்மை, தட்பம் முதலியவை பெண் மக்கள் தன்மைகளாகவு மிருக்கின்றன. இதனல், பெண்ணுக்கு மிருளுக்கு மொரு

பற்றும், ஆணுக்கு மொளிக்கு மொரு பற்று முண்டென்பது பெறப்படுகின்றது. பாயு மாற்றல் ஆணுக்கும், வாங்கு மாற்றல் பெண்ணுக்கு முண்மை நிறுவவேண்டிய தொன்றன்று. அமைதியினாற் பிறக்கின்ற தூக்கத்திற் கிசைவாகிய இருளொடு பொருந்தி நிற்கும் பெண்ணுக்குக் கரிய நிறமும், ஒலியினாற் பிறக்கின்ற இயக்கத்திற் கிசைவாகிய ஒளியோடு சேர்ந்திலங்கும் ஆணுக்குச் சிவப்பு நிறமும் அமைதல் இயற்கையாமன்றோ?

---

# நாமகள் திருப்பள்ளி யெழுச்சி

[யாழ்ப்பாணம் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை]

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பைய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனும் மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. க

சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்
தருமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
சிறைபுடை யடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு கரற்றிய வொலியும்
அடியவர் சயசய வமலையு மலியும்
எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. உ

அன்புடை யடியவர் அகப்புனற் றடந்தோ
றறிவெனும் தாமரை முகைநெகிழ்ந் தவிழ்ந்த
வன்புடைப் பேதைமை மடுவினிற் பூத்த
வஞ்சனை பொய்முதல் மலர்வகை குவிந்த

இன்புடை யறம்பொரு ளின்பமும் வீடும்
　　எய்துதல் விருப்பினில் யாவரு மெழுந்தார்
என்புயிர் பெறவருள் முத்தமிழ்க் கடலே
　　இன்னமு தேபள்ளி யெழுந் தரு ளாயே. ௯

புத்தலர் பூங்குழற் புயல்புறந் தவழும்
　　புதுநில வுமிழ்மதி முகமலர் பொழியும்
முத்தன விளநகை முறுவலின் கருணை
　　முந்துறக் கண்டடி முளரிகள் தொழுவான்
பத்திமை யடியவர் கோயிலின் வாயில்
　　பாடின ராடினர் பரவினர் படர்ந்தார்
இத்தரை மதித்திடு முத்தமிழ்க் கடலே
　　இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௰

மீட்டிய யாழினர் குழலின ரொருபால்
　　வெண்டுகிற் பட்டினர் விரையின ரொருபால்
கூட்டிய சுண்ணத்தர் வண்ணச் செஞ்சாந்தர்
　　குளிர்புனல் மஞ்சனக் குடத்தின ரொருபால்
தீட்டிய செழுந்தமிழ் மாலைய ரொருபால்
　　திருவடி வணங்குபு திறையொடு புகுந்தார்
எட்டினி லெதிர்தவழ் முத்தமிழ்க் கடலே
　　இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௰௧

அரன்றனைக் கூடலி லழைத்தமை பாடி
　　அருமறைப் பூட்டினை யவிழ்த்தமை பாடி
சிரந்தனை யறுத்துயிர் கொடுத்தமை பாடி
　　தீயின்மே லாடிய திறமையும் பாடி
வரந்தரு வாரமுங் கோவையும் பாடி
　　வாசகம் பாடிநல் வாய்மொழி பாடி
இரந்தனர் தொண்டர்கள் முத்தமிழ்க் கடலே
　　இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௰௨

முப்புர மெரிசெய்த முதுபரம் பொருளும்
　　முருகனு மொருகுறு முனிவனும் பிறரும்

செப்பிய செழுந்தமிழ்ப் பாண்டிநன் ஞட்டில்
திருவொடும் வளர்த்தருள் செய்தவப் பாவாய்
கைப்பிடி புதுமலர் கொண்டுனை தடியார்
காமரு சேவடி கைதொழ வடைந்தார்
இப்படி துதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௭

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கினின் வாய்மொழி கேட்டு
மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பாவாய்
ஈனனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௮

தேவர்கள் பாற்கடற் றீவிடங் கொடுத்தார்
சிவனுக்கு நூற்கடற் செவியமு தளித்தாய்
காவியங் கயல்விழிக் கலைப்பெரு மாட்டி
காசினிக் கேகனி கற்பகக் கனியே
ஆவியை யுருக்கிடு மருமொழிப் பாவாய்
அகத்தியன் மடிமிசை யமர்ந்திடு பூவாய்
ஏவிய புரிகுவம் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௯

ஆடினர் பாடினர் ஆர்த்தனர் செறிந்தார்
அம்மையுன் வாய்மொழி யருமையை யறிந்தார்
தேடின ரோடினர் சிறுமையை விடுத்தார்
தெருவெங்குஞ் செந்தமிழ்த் தோத்திர மெடுத்தார்
வாடின ருன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ௰

---

ஓம்
திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீஜ்ஞான ஸம்பந்த ஸ்வாமிகள் அஷ்டோத்தர சத நாமாவளி.

[திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை]

1 ஓம் ஜ்ஞாநஸம்பந்தாய நம:
2 ,, வேதாந்தாய நம:
3 ,, பக்தவாத்ஸல்யவாஸிநே நம:
4 ,, பரமாநந்தபத்யாய நம:
5 ,, ஹரிஸேவிதமூர்த்தியே நம:
6 ,, ஜிஹ்வாராஜப்ரியாய நம:
7 ,, புத்தநாசகாரணாய நம:
8 ,, ஸ்ரீபஞ்சாக்ஷரபத்யாய நம:
9 ,, கௌணீயகுலநந்தநாய நம:
10 ,, நீலநக்நவிரயாய நம:
11 ,, அகஸ்த்யகுரவே நம:
12 ,, லோகப்ரக்யாய நம:
13 ,, சிவதுஷ்யபத்யாய நம:
14 ,, குருநாதாய நம:
15 ,, பாலாய நம:
16 ,, பகவதீபுத்ராய நம:
17 ,, பத்மாநநாய நம:
18 ,, புஜத்வயாய நம:
19 ,, ச்வேதாங்காய நம:
20 ,, திவ்யசக்ஷுஷே நம:
21 ,, சிவதுஷ்யாய நம.
22 ,, பதத்வயாய நம:
23 ,, ஸவ்யதர்ஜநிதீர்க்காய நம:
24 ,, பயஃபாத்ரதராய நம:
25 ,, த்ராவிடத்ரிவிதச்ரேஷ்டாய நம:

26 ,, காளீபுரவிநாயகாய நம:
27 ,, தாடங்கப்ரதமாரம்பபத்யாய நம:
28 ,, தவிநேத்ராய நம:
29 ,, குலபக்ஷகமித்ராய நம:
30 ,, ஸ்வர்ணதாளதராய நம:
31 ,, மௌக்திகசிவிகாரூடாய நம:
32 ,, மௌக்திகச்சத்ரதாரிணே நம:
33 ,, மௌக்திகசிஹ்நதேவாய நம:
34 ,, மதுரகவயே நம:
35 ,, நிஷ்களரூபாய நம:
36 ,, நிஷ்கதோஷநாசபத்யாய நம:
37 ,, பத்மமாலாதராய நம:
38 ,, பஞ்சாக்ஷரகண்யாய நம:
39 ,, சிவாங்க்ரிசித்தகுமாராய நம:
40 ,, த்ரோணீபுரவிநாயகாய நம:
41 ,, ஸ்வர்ணாம்பரதராய நம:
42 ,, மமசித்தேநிவாஸிநே நம:
43 ,, அபவந்நாவிகத்ரோணீநதீலங்களபத்யாய நம:
44 ,, வீணாகண்டிதபத்யகாயிநே நம:
45 ,, ஸ்வரநாதாய நம:
46 ,, கபாடப்ந்தநபத்யாய நம:
47 ,, வித்யாப்ரகாசதீமதே நம:
48 ,, மஹிளாநாயகீஸேவிதாய நம:
49 ,, திவ்யத்ருஷ்டயே நம:
50 ,, சிவாங்க்ரியுகசித்தாய நம:
51 ,, மௌக்திகவிதானிநே நம:
52 ,, மஞ்சுளகருணாகராய நம:
53 ,, ஸௌந்தராய நம:
54 ,, புருஷச்ரேஷ்டாய நம:
55 ,, ஸௌந்தரஸ்துத்யாய நம:
56 ,, ஸத்குணாய நம:
57 ,, பரமாநந்தாய நம:

58 ,, ஸர்வதாசிவசித்தாய நமః
59 ,, பும்ஸ்தாலபேதபத்யாய நம:
60 ,, தர்மாநாதாய நம:
61 ,, பரமாத்மநே நம:
62 ,, ஆர்ஹதரயே நம:
63 ,, மஹாஜ்ஞாநிநே நம:
64 ,, ச்யாமளகவிவாசகாய நம:
65 ,, நத்யாரோஹணபத்யாய நம:
66 ,, தீர்க்கமாரப்ரியாய நம:
67 ,, ஜ்வரநாசபத்யாய நம:
68 ,, கௌண்டியகுலதீபகாய நம:
69 ,, விஷமோசகவீக்ஷணாய நம:
70 ,, விஷமோசகபத்யாய நம:
71 ,, கணநாதப்ரியாய நம:
72 ,, தப்ரபக்தேநபூஜ்யாய நம:
73 ,, குக்குலுகலசநாதேநபூஜ்யாய நம:
74 ,, குணஸாகராய நம:
75 ,, ஸ்ரீமஹாதேவயஜ்வாஜாமாத்ரே நம:
76 ,, பராத்பராய நம:
77 ,, ஆதீநாயகாய நம:
78 ,, ச்ரேஷ்டாய நம:
79 ,, ஜ்ஞாநம்ருதபாநகாய நம:
80 ,, கல்யாணவீக்ஷணஸர்வமோக்ஷதாயிநே நம:
81 ,, ஸ்கந்தநாதப்ரியாய நம:
82 ,, கங்காதரமநோகராயநம:
83 ,, அபஸ்மாரதோஷநாசாய நம:
84 ,, ஆர்த்ராஜநநாய நம:
85 ,, வித்வஜ்ஜநவிசிஷ்டாய நம:
86 ,, விச்வாதீதகுணாத்மநே நம:
87 ,, கருணாகராய நம:
88 ,, பக்தேசாய நம:
89 ,, கல்யாணகுணமூர்த்தயே நம:

90 ,, காமக்ரோதவிமோசநாய நம:
91 ,, ராகத்வேஷவிநாசிநே நம:
92 ,, லோபமோஹாபிராவிநே நம:
93 ,, லோகேஸத்பிதஸேவ்யாய நம:
94 ,, சித்ரகவயே நம:
95 ,, சிதாகாசே சிவதர்சநதீமதே நம:
96 ,, ஜ்ஞானசார்யாய நம:
97 ,, க்ரியாசார்யாய நம:
98 ,, யோகாசார்யாய நம:
99 ,, மனோஹராய நம:
100 ,, அஸ்திகன்யாக்ருதபத்யாய நம:
101 ,, அநேகக்ஷேத்ரதர்சிநே நம:
102 ,, சிவே நிஷ்கஸஹஸ்ரலாபவதே நம:
103 ,, நயனாம்புஜாய நம:
104 ,, ஷோட்சஸஹஸ்ரகவிதுலவாசகாய நம:
105 ,, நித்யாநந்தகுணாகராய நம:
106 ,, நீலகண்டபதாக்ரிதாய நம:
107 ,, ஸாம்யசித்தாய நம:
108 ,, சைவஸித்தாந்தநாயகாய நம:

முற்றிற்று

---

# மதிப்புரை

## முதற் குலோத்துங்க சோழன்


இது கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் இயற்றியது. இவர்கள் கல்வெட்டாராய்ச்சியில் நீண்ட நாட்களாகப் பாடுபட்டு பண்டைத் தமிழ் நாட்டு வரலாறுகளின் உண்மைகளைத் தெள்ளத்தெளிய உணர்ந்தவர்களாவர். இவர்கள் தமக்குக் கிடைக்கப் பெற்ற கருவிகளைக் கொண்டு கூடிய வரை ஐயவேறு பாடுகளி றி இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் அனைவரும் இதனை வாங்கிக் கற்றுத் தங்கள் நாட்டு முன்னோர் வரலாற்றைத் தெரிந்து இறும்பூ தெய்துவார்களாக.

இது நூலாசிரியரிடத்திலும் நமது கழகத்திலும் விலைக்குக்கிடைக்கப்பெறும். விலை அணா 12

## இன்னிலை மூலமும் உரையும் (2-வது பதிப்பு)

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலொன்று. இதனை இயற்றியவர் பொய்கையார். இதற்கு விருத்தியுரை இயற்றியவர் கோயில்பட்டி வழக்கறிஞர், வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள். இதனை முதன் முதல் ஏட்டுப் பிரதியினின்றும் வெளியிட்ட இவ்வுரையாசிரியர்க்குத் தமிழகம் பெரிதும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையது.

இது கழகத்திலே கிடைக்கப் பெறும். இதன் விலை ரூபா ஒன்று.



திருவண்ணாமலைக் கோயில்.